REGISTERED No. M. 120.

ओं.

JNÂNA BODHINI.

A TAMIL MAGAZINE AND REVIEW.

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION.

EDITOR:
M. S. PURNALINGAM PILLAI, B.A.

Vol. VIII. No. 2.—February 1905.

CONTENTS.

PAGE.

I. THE RUSSO-JAPANESE WAR—**Editor** 57

II. ORIGINAL ARTICLES—

1. The Greatest Man of the 19th Century— **K. C. Duraisami...** 59
2. Natural History IV— **V. N. Iyengar, M. A....** 64
3. Orgin of Kodungallore Temple II— **T. Ponnambalam Pillai, M. R. A. S....** 67
4. Bacon's Essays II. Death— **C. W. Coomaraswami...** 75
5. Thinaimozhi Aiyambadhu-One of the 18 Notable books of the last Sangam... 78

III. LIGHT LITERATURE—

1. "As You like it"— **Pandit C. Thiruchittrambalam...** 81
2. Saraswati—(A Novel) **V. Muthukumaraswami, B. A....** 85

IV. LADIES' PAGES:—

1. How a bashful lover proposed— 91

V. RECENT TAMIL PUBLICATIONS— 93

VI. DEPARTMENTAL NOTES— 96
—"Mahabharata"

Madras:

"THE MADRAS LITERARY BUREAU,"

BLACK TOWN.

1905.

Thompson & Co., Printers, Madras.

THE

Madras Literary Bureau.

OFFICE:

10, Broadway, Black Town, Madras.

PATRONS:

Diwan Bahadur The Hon'ble Justice Sir S. Subramania Aiyar, K.C.I.E., F.M.U.
Diwan Bahadur P. Rajarathna Mudaliar, C.I.E., F.M.U.
T. Vedadrisadasa Mudaliar, Esq.
(*Retired High Court Judge of Travancore.*)

Honorary Corresponding Members.

T. Ramakrishna Pillai, Esq., B.A., F.M.U., F.R.H.S.
G. Subramania Iyer, Esq., B.A.
J. M. Velu Pillai, Esq., F.M.U.
V. Kanakasabhai Pillai, Esq., B.A., B.L.
T. Balasundara Mudaliar, Esq.

SECRETARY:

K. C. Duraisami, Esq.

REPRESENTATIVES:

Throughout Tamil Districts.

ORGAN:

The 'Jnana Bodhini' (ஞானபோதினி),
(A Tamil Monthly Magazine and Review, mainly devoted to Literature Science, Philosophy and Religion).

MEMBERS.

Two classes of Members are taken in.
Annual Subscription for First Class Members Rs. 10.
Do do Second Class Members Rs. 2.

To the Members of the first class the organ of the Bureau, *i.e., Jnana Bodhini* as well as all the other publications will be supplied free.

To the second class Members the journal will be supplied at the reduced rate of Re. 1-8-0 per year and the other publications at $33\frac{1}{3}$ p. c. less than the original price.

Only 500 Members.

I.e., 200 First Class Members and 300 Second Class Members will be admitted
For particulars, and Application Forms apply to the Secretary.

The '*Madras Literary Bureau*' has the following separate Departments:

1. Printing and Editing.
2. Translation.
3. Newspaper.
4. Contribution.
5. Copying, and
6. General Agency.

The '**Bureau**' Edits and Prints Books, &c., for authors and publishers, passes proofs through the press.

The '**Bureau**' purchases Tamil MSS. of Romance, Novels, Fairy Tales and Detective Stories for publication.

The '**Bureau**' undertakes to translate all kinds of work into Tamil.

The '**Bureau**' is quite prepared to take Sale and Sole Agency of Books.

ஞானபோதினி.

"மதராஸ் லிடரரி பூரோ"விலிருந்து வெளிப்படும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VIII. | 1905-ம் ௵ பிப்ரவரி ௴ | சஞ்சிகை 2.

THE RUSSO-JAPANESE WAR.

உருஷியா ஜெப்பானியர் யுத்தம்.

சில்லாண்டுகளுக்கு முன் போவர் யுத்தகளம் உலக மனத்தினும் வியந்து பேசச்சிறந்து விளங்கிற்று. நிகழ்காலத்து நிகழும் உருஷியா ஜெப்பானிய யுத்தமுஞ் சிறியதன்று. ஜப்பானியர் இராஜ்யமட்டுஞ் சிறிதே யன்றி யன்னோர் இராசியங்கள் சாமானியனவல்ல. சிறியவையாக அவற்றைக்கணிப்பவரே சிறியவராவர். அதற்குதாரணம்நீளச்சென்றுதேடவேண்டா. ஐரோப்பா ஆசியா கண்டங்களின் நேர்பாதி சுயவரசாட்சி புரிந்து உலகெலாம் அலகிலாப்புகழ் பரப்பி எவரையும் பகைவராத் தோன்று வகையிலே ஓர்வகைப் பீதியைத் தோற்றிவைத்துச் சிறந்து வந்த மாநிலங் காவலராகிய (ஸார்) உருஷியச் சக்கிரவர்த்தியையே இவ்வுண்மைக்கு மேலான காட்டாக வெடுத்துக் காட்டலாம்.

இருதிறத்தவர் படைகளும் ஓயாது நெடுங்காலமாகப்போர்புரிந்துவருவதில் இதுவரை ஜெப்பானுக்கே வெற்றி. கடுகு சிறுத்திருக்

குமே யெனினும்காரங்குன்றுது. மகிழ் நண்ணியதேயாயினும்மணக் குறைவுண்டா? அகத்தியரே குறுமுனி என்றுலும் அவர் செழிக்க வைத்தனு தமிழாகும் தமிழே. உருவு கண்டு எதனையும் எள்ளலா காது. சிரியர் சிறியராகத் தோன்றுவர். ஜப்பான் இராஜியம்சிறியதென்றும், ஓர் தீவாந்தரமென்றும், சிரித்துக்கணித்துப்பலத்தையும்மற்றவதன் நலத்தையுஞ் சீர் தூக்காது போர் முகத்து அதனை நிற்கச் செய்து, தனதுபடைகளைப் பாவலர் தோல்வித்தானம்பாடவிடுத்தும், குடிகளைக் குமரக்கிடத்தியும் ராஜரீகம் புரிவது தற்கால உருஷியர்ஙளரின் மேலானகீர்த்தியாகும்

ஜப்பானியரோ அடுத்த 40 அல்லது 50 ஆண்டுகளுக்குள்ளாக மேற்பதவி யடைந்தவர்கள். இச்சொற்ப காலத்திற் குள்ளாகவே யன்னோர் கல்வியாதியாம் பல்வேறு பட்ட துறைகளிலும், கைத்தொழிலாதியாம் நானவித முயற்சிகளிலுஞ் சிறுகச்சிறுக மேம்பட்டு நாகரீக முதிர்ந்த நாட்டார் அனைவரும் புனைந்துரைக்கு மாற்றலுடையது வியக்கற் பாலதே. இன்னோர் போர்த்திறத்தில் வைரமேறியது எவ்வாறு? 'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்.' போர்க்களத்து இகழ்ச்சியும் ஜப்பானியருக்கு எவ்வாறுறும்? முயற்சி தெய்வத்தான் ஆகாதனவற்றையுங் கூட்டிவைப்பதன்றோ!

ஜப்பான் உருஷிய யுத்தத்திற் களமேறி நின்றோர் தொகை இருகக்ஷியாருள்ளும் 9,00,000. இவர்களுள் உருஷியர் 4,00,000. இத்தொகையுள் வீரசொர்க்கம் புகுந்தோரும், கையிழந்து, காலிழந்து, ஊறுபட்டோரும், சிறை பிடிக்கப்பட்டோரும்சுமார் 2,00,000. ஜப்பானியர் 5,00,000. இவர்களுக்கு நேர்ந்த சேதம்50,000. முற்பட்ட பெரிய நஷ்டத்திற்குள்ளான உருஷியர் இன்னும் தமதுநிலைமையை நன்குணர்ந்தாரல்லர். ஐரோப்பிய சரித்திர யாத்திரை செய்த வல்லோரெல்லோரும் இதுபோன்ற பெருத்த போர் 1813ம் ஆண்டு முதல் இதுவரை நடந்ததில்லை யென்றே விதந்து கூறுகின்றார்கள்.

ஜப்பானியர் களத்தைப் பாடப்பெரும் புலவர் வேண்டும். பரணிபாடிய ஜயங்கொண்டான் இப்பொழுது இருந்தால் யவனப் பரணிபாடி யவனியறிய விட்டிருப்பர். ஜப்பானியர் வெற்றி முற்றிலும் வெற்றியே யாகுக!

பத்திராதிபர்.

THE GREATEST MAN OF THE NINETEENTH CENTURY.

பத்தொன்பதாவது நூற்ருண்டில் விளங்கிய ஓர் மேதாவி.

கேஷப் சந்தர் ஸேன்.

'அறிவுடை யோனு றரசுஞ் செல்லும்.'—புறநானூறு.

சேன ராஜாக்கள் வம்சத்தில் தோன்றிய கேஷப் குடும்பத்தினர்கள் வைத்திய ஜாதியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஹூக்லி நதிக்கரையிலுள்ள காரிபாவென்னும் கிராமத்தில் வசித்தவர்கள். கேஷப்சந்தர்ஸென்னின் பாட்டனுகிய ராம் கமல்ஸென் காலத்தில்தான் இக்குடும்பம் முன்னுக்கு வந்தது. இந்த ராம்கமல் முதலில் 8 ரூபாய் சம்பளத்தில் 'கம்பாசிட'ராகவிருந்து பெங்கால் பாங்கின் திவானுக மாதம் சுமார் 2000-ரூ சம்பள முள்ள வேலைக்கு உயர்ந்தவர். இவர் மிகவும் புத்திசாலி. ஆங்கிலமும் பெங்காலி பாஷையும் சேர்ந்த ஒரு அகராதியை வெளியிட்டவர். இவருக்கு 4-குமாரர்கள். பியரிமோக னென்பவர் இரண்டாவது பிள்ளை. இவர் தன் தகப்பனு ரிறந்த மூன்று வருஷங்களுக்கெல்லாம் அதாவது 1848-ம் ஷூத்தில் தன் 34-வது வயதிற்காலமானுர். இவருக்கு அப்பொழுது மூன்று குமாரர்கள். இவர்களுள் கேஷப் சந்தர் இரண்டாவதானவர்.

கேஷப் 1838-ம் ஷூ நவம்பர்மீ 19௳ கல்கத்தாவில் தோன்றினவன். தன் தகப்பனு ரிறக்கும்பொழுது இவனுக்கு 16-வயது. ஆயினும் இவனுடைய தாயார் சாதாரண மானவளல்லள். ஜாக்கிரதையாகவும் புத்தி கூர்மையோடும் வளர்ந்ததே கேஷப் சந்தரை உன்னதமானவனுகச் செய்தது. குழந்தையா யிருந்தபொழுது இவனுக்கு நேர்த்தியான வஸ்திரங்கள் பேரிலும், பெட்டிகள் பேரிலும், மற்ற சாமான்கள் பேரிலும் அதிக ஆவலுண்டு. தன் சாமான்களைப் பிறர்தொடச் சம்மதியான். இவன் துஷ்டத்தனஞ் செய்ய மாட்டான். கோபம் கிடையாது. கொஞ்சநாள் வீட்டிலிருந்தே சுயபாஷை கற்ற பிறகு 1845-ம் ஷூத்தில் ஹிந்து கலாசாலைக் கனுப்பப்பட்டான். மாணவனு யிருக்கும்பொழுதே மிகுந்த சுறுசுறுப்பை யுடையவன். ஒவ்வொரு வருஷமும் வருஷாந்திர பரிக்ஷையில் இவனுக்கு ஒன்று அல்லது இரண்டு பரிசுக ளில்லாமலிராது. ஒருதடவை 1850-ம் ஷூத்தில் இவன் ஒரு பெரிய கணித நூலைப் பரிசாகப் பெற்ருன். அது முதல் இவனைப் பெரிய புத்தகத்தோடு கூடிய சிறிய பையனென வழைப்பார்கள். இவனுடைய இளமையில் முதிர்ந்த புத்தியானது விடாமுயற்சியுடன் சேர்ந்து அபிவிர்த்தி யடைந்தது. இவனுடைய கல்வி யிடையூறன்றி யிருக்கவில்லை. இவன்படித்துவந்த ஹிந்து

கலா சாலையின் போஷகருக்கும் அதிகாரிகளுக்கும் கொஞ்சம் மனஸ்தாப முண்டானதால் கல்கத்தாவில் மெட்ரோ பாலிட்டன் காலேஜ் என ஒரு போட்டிகலாசாலை யேற்படுத்தி கேஷப் சந்தரை ஹிந்துகலாசாலையி னின்றும் பிரித்து இப்புதிய கலாசாலையி லுயர்ந்த வகுப்பில் சேர்த்து விட்டார்கள். ஆனால் இக்கலாசாலை அதிகநாள் நீடித்திருக்க வில்லை. ஆகையால் ஒரு வருஷத்திற் கெல்லாம் கேஷப் மறுபடியும் ஹிந்துகலாசாலைக்கே போகும்படியாயிற்று. இவ்வித மாறுதலா லிவனுடைய படிப்பிற்கு கொஞ்சம் ஹானி நேரிட்டது. இவன் 1858-ஹத்தில் காலேஜைவிட்டான்.

இளம்பிராயம் முதலே இவற்குத் தெய்வபக்தியுண்டு. கிறுஸ்துவபாதிரிமார்களாகிய ரெவரண்டு T. H. பர்ன்ஸ், ரெவரெண்டு J. லாங், ரெவரண்டு C. H. A. டால் முதலியவர்களிடம் பாலியத்தி லிருந்தே பழக்கமுள்ளவர் இன்னோருடையவும் மற்றசினேகதர்களுடையவும் ஒத்தாசையின் பேரில் அறிவையும் கல்வியையும் விருத்தி செய்யும்பொருட்டு பிரிட்டிஷ் இந்தியா ஸொஸைட்டி என்றவொரு சங்கத்தை ஸ்தாபித்தார்.

இதைத்தவிர அனேக பள்ளிக்கூடங்களும், சங்கங்களும், ஒழுங்குகளும் எற்படுத்தி யிருக்கிறார். 1885-ம்வருஷத்தில் சாயங்காலப் பள்ளிக்கூடம் (Calcutta Evening School) ஒன்றேற்படுத்தினார். இதில் உயர்ந்த ஆங்கிலேயம் கற்பித்ததுடன் நீதிகளைப்பற்றியும் மதத்தைப் பற்றியும் பிரசங்கித்தார். இவருக்கு ஷேக்ஸ்பீயர் நாடகத்தில் பிரியமதிகம். அந்நாடகங்கள் நடத்தி யிருக்கிறார். 3, 4, வருஷங்களுக்கெல்லாம் இவர் கல்கத்தாவில் ஸ்தாபித்த சாயங்காலப் பள்ளிக்கூடம் நின்று போகவே, வேதசாஸ்திரங்களுக் கடுத்தவும், பக்திக்குரியவுமான விஷயங்களைப் பரவச்செய்ய 'குட்வில் பர்ட்டெர்னிட்டி' ('Goodwill Fraternity) என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார். இதில் ஆங்கிலேய பாஷையில் கடவுள் நம் தகப்பனென்றும்மானிடர்களெல்லாரும் நம் சகோதரர்க ளென்றும் பேராவேசத்தோடு பிரசங்கிப்பார். அதே வருஷத்தில் தேவேந்திரநாத்டாக ரேற்படுத்தி யிருந்த பத்திரத்திற் கையொப்ப மிட்டு பிரம்மோசமா ஜத்தைச் சேர்ந்தார். 1859-ம் ஹத்தில் பிரம்மோஸ்கூல் என்ற ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்ட பொழுது இவரும் தேவேந்திர நாத்டாகரும் அதில் பிரசங்கம் செய்தார்கள். உடனே ஒரு நாடகக் கம்பேனி யேற்படுத்தி விதவவிவாக நாடக மென்பதை யாடினார்கள். இது கல்கத்தாவில் ஒரு உணர்ச்சியை உண்டாக்கிற்று.

இவருடைய உறவினர்களிவரை யொருவேலையி லமர்த்த உத்தேசித்துப் பெங்கால் பாங்கில் 25ரூ. சம்பளத்தில் ஒரு குமாஸ்தாவாக நியமித்து வைத்தார்கள். ஒரு வருஷத்தில் இவருக்கு 50-ரூ சம்பளமாயிற்று. இவ ரதிலே யேயிருந்திருப்பின் உன்னத ஸ்தானத்தையடைந்திருப்பார். ஆனால் 1861-ம்

ஷூத்தி லிவ்வேலைக்கு இராஜிநாமாக் கொடுத்துவிட்டார். 1867-ம் ஷூத்தில் வரிசைக் கிரமமாகச் சேனை வம்சத்தார்கள் வேலைபார்த்து வந்த கல்கத்தா தங்கசாலையில் வேலையி லமர்ந்து 2, 3, மாதங்களுக்கெல்லா மிதையும் விட்டுவிட்டார். இதற்குப் பிறகு பிரம்மோசமாஜன் குருவா யிருப்பதைத் தவிர்த்து வேறே ஒரு வேலையிலு மமரவில்லை.

1860-ம் ஷூத்தில் 'சிறியபெங்கால் வாலிபர்களே! இது உங்களுக்கு' என்ற புஸ்தகத்தைப் பிரசுரித்தார். இதற்குப் பிறகும் அனேக புஸ்தகங்களைப் பிரசுரித்திருக்கிறார். முதல்முதல் பிரம்மோச மாஜின் தூதனாக 1860-ம் ஷூத்தில் கிருஷ்ணகர் சென்றார். இவ்விடத்தில் இவருக்கும் கிறிஸ்துவ பாதிரிமார்களுக்கும் வாக்குவாத முண்டாய் பாதிரிமார்கள் தோல்வியடைய வைதீகர்களுக்குப் பேரானந்த முண்டாகிக் கேஷப்பை யுபசரித்தார்கள். இதற்குப்பிறகு வீட்டுக்குத்தெரியாமல் ஸிலோனுக்கு தேவேந்திரநாத்துடன் சென்றார். அங்கிருந்து, திரும்பிவந்து மதவிஷயமான வாக்குவாதங்கள் செய்வதற்காக 'சங்கத்ஸபை' யென்றொன்று கல்கத்தாவிலேற்படுத்தினார். 1861ம் ஷூத்தில் 'இந்தியன் மிரர்' Indian Mirror என்னும் பத்திரிகையை பிரசுரிப்பதில் பிரதானமா யிருந்தவர்களி லிவர் ஒருவர். அடுத்த வருஷத்தில் கல்கத்தா காலேஜைஸ்தாபித்தார்; இதில் நீதிமுறையையும் மதத்தையும் பற்றிய விஷயங்கள் வாலிபர்களின் மனதில் பதியும்படி போதித்தார். 1862-ம்ஷூத்தில் பிரமமோசமாஜின் தலைவராகிய காலஞ்சென்ற தேவேந்திர நாத்டாகர், கேஷப்பை பிரம்மோசமாஜின் குருவாகச் செய்தார். இந்த விசேஷத்திற்குத் தன் பத்தினியும் தன்னுடனிருக்க வேண்டு மென்பது கேஷப்பின் கருத்து. அனலவருடைய உறவினர்களிதற்கு ஆக்ஷேபித்தார்கள். அதைக் கவனியாமல் தன் பத்தினியைத் தன்னுட னழைத்துக்கொண்டுபோக அவருடைய தமயனும் மற்றவர்களு மவரைத் திரும்பி வீட்டுக்கு வரக்கூடாதெனச் சொல்லிவிட்டார்கள். கேஷப்பும் அவருடைய பத்தினியும் தேயவந்திரநாத் வீட்டி லிருந்தார்கள். இதன் பிறகுதான் பிரம்மசமாஜ மெம்பர்களின் பத்தினிகளும் சமாஜைச்சேர்ந்தவர்களாகப் பாவிக்கப்பட்டார்கள். கடைசியாக கேஷப் சந்தரை வீட்டிற் சேர்த்துக் கொண்டார்கள்.

கேஷப் சந்தர் பிறகு சென்னை பம்பாய் முதலிய விடங்களுக்குச் சென்றார். இவ்விரண்டு விடங்களிலும் இவர் நன்றாய் உபசரிக்கப் பெற்றார்; பிரமோச்மாஜங்களையும் அங்கங்கே ஸ்தாபித்தார். இவ்விடங்களிலிருந்து கல்கத்தா திரும்பிய பின்னர்தான் இவருக்கும் இவருடைய குருவாகியதேவேந்திரநாத்துக்கும் மனஸ்தாபம் நேரிட்டது. கேஷப் சந்தர் பிரமோசமாஜைச் சேர்ந்தவர்கள் பூணூல்தரிக்கக்கூடா தென்றும் விதவைகளை மணம்புரிவிக்கலாமென்றும் ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியில் கலியாணம் செய்யலாமென்றும் பிர

சங்கித்தார். தேவேந்திர நாத்துக்கு இது சரியெனப்புலப்படவில்லை. இவ்வித் தியாசங்கள் 1866-ம்ஆஷுத்தில் இந்தியா பிரம்மோசமாஜ் என்று ஒரு தனிச மாஜத்தை யேற்படுத்தி விட்டன.

கேஷப் சந்தர் தாமிருந்த ஆதிபிரம்மோசமாஜத்தினின்றும் நீங்கி 1866-ம்ஆஷு நவம்பர்மீ 11உ இந்தியப் பிரம்மோசமாஜ மென்பதை ஸ்தா பித்துத் தாமும் இன்னும் சில வாலிபர்களும் அதற்குக் குருக்களானார் கள்; தூதர்களு மானார்கள். அவ்வருஷம் மார்ச்சு மாதத்தில் இவர் 'யேசுகி றிஸ்து ஐரோப்பாவும், ஆசியாவும்' என்ற விஷயமாய்ப் பிரசங்கஞ் செய்து கடைசியில் இயேசுவாவானவர் மானிடர்களைவிட உயர்ந்தவர் என்பதாக முடி த்தார். உடனே கிறிஸ்துவர்க ளெல்லாரு மிவரும் கிறிஸ்துவராகி விடுவா ரென்று நினைத்தார்கள். ஹிந்துக்க ளெல்லாரு மிவரை நிந்தித்தார்கள்.

ஆனால் மற்றொரு தடவை உன்னத மனிதர்களைப் பற்றி விவகரித்த போது அவரையும் இயேசுவுக்கு சமனாகச் சொல்லியதால் கிறிஸ்துவர்களின் முந்திய எண்ணம் வீணாயிற்று. கேஷப் பிறகு பெங்காலின் கீழ்பாகங்களுக் குச் சென்றுவந்தார். அங்கே போகும்பொழுது அவ்விடத்திலுள்ள வைதீக ஹிந்துக்கள் இவருடைய ஜயத்தைக் கண்டஞ்சி தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொட்டு ஹிந்துதர்மரக்ஷணி சபையென வொன்றை ஸ்தாபித் தார்கள். இவர் திரும்பிவந்து 1868-ம்ஆஷுத்தில் கடவுளைத்தொழ 'பிரம் மோ மந்திரம்' என்ற ஒருகோயிலைக் கட்டினார். இரண்டு மாதங்களுக்கப்பால் வடமேற்கு மாகாணங்களுக்கும் பம்பாய்க்கும் சென்று பிரசங்கங்கள் செய்து மாங்கிருக்குத் திரும்பிவந்தார்.

அப்பொழுது நம்முடைய இராஜப் பிரதிநிதியா யிருந்த லாரன்ஸ் பிரபு வின் வேண்டுதலின் பேரில் கேஷப் சிம்லாவுக்குப்போய் பாங்கிப்பூரென்னு மிடத்தில் இராஜப்பிரதிநிதியைக் கண்டு பேசியபொழுது, பிரம்மோ விதிப்ப டியாகும் கலியாணங்களும் சட்டப்படி நடக்கிறவை தாமெனச் சட்ட மேற் பட வேண்டுமென்று சொன்னார். இராஜப் பிரதிநிதியு மிதற் கிணங்கினார். 1868-ம் வருஷத்தில் ஒரு மசோதாவும் சட்டநிர்ணய சபையில் கொண்டு வரப்பட்டது. அவ்வருஷக் கடைசியில் கேஷப் கல்கத்தா திரும்பினார். 1870 ம்வருஷம் ஆரம்பத்தில் கேஷப் சந்தர் இங்கிலாந்திற்குப் புறப்பட்டு மார்ச்சு மாதத்தில் லண்டனை யடைய நம் இராஜப்பிரதி நிதியா யிருந்து இங்கி லாந்து சென்றிருந்த லாரன்சு பிரபு வாலும் மற்றும் சில ஆங்கிலேயர்க ளாலும் இவர் வரவேற்கப்பட்டார். இவர் இங்கிலாந்திலும் ஸ்காட்லாந் திலு முள்ள 14 முக்கிய நகரங்களுக்குப்போய் மதவிஷயமாய்ப் பிரசங்கித்திருக்கி றார். மற்றும் 40 நகரங்களிலிருந்து இவரை வரும்படி அழைக்க இவரவ்விடங் களுக்கு காலக்குறைவால் போகவில்லை. இவ ரிங்கிலாந்தில் 70 இடங்களில்

சுமார் நாற்பதாயிரம் ஜனங்களுக்குப் பிரசங்கித்திருக்கிறதாக மதிக்கப்படுகின்றது. இவர் மிஸ்டர் க்ளாட்ஸ்டன் மிஸ்டர் டிஸ்ரேல் முதலியவர்களைப் போய் பார்த்திருக்கிறார். மாக்ஸ் முல்லர் முதலியோர் இவரை வந்து பார்த்திருக்கிறார்கள். இவர் காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியைப் பார்த்து தம்முடையவும் தம்முடைய பத்தினியுடையவும் படங்களைக் கொடுக்க மகாராணி தம்முடையவும் தம் பர்த்தாவுடையவும் படங்களை யளிக்கப் பெற்றார். இவர் செப்டம்பர் மாதத்தில் லண்டனை விட்டுப் புறப்பட்டு அக்டோபர் மாதத்தில் பம்பாயை யடைந்தார்.

திரும்பி வந்தவுடன் இந்தியர்களின் ஜனசாரத்தையும் சன்மார்க்கத்தையும் சீர்திருத்தஞ் செய்யும்பொருட்டு **இந்தியன் சீர்திருத்த சங்கம்** (Indian Reform Association) என ஒன்றை ஸ்தாபித்தார். இச்சங்கம் 5 பிரிவுகளை யுடையது. அதாவது, 1: நல்ல கிரந்தங்களை இலகுவான விலைக்கு கிடைக்கும்படி செய்தல், 2. தர்மஞ்செய்தல், 3. ஸ்திரீகளின் நிலைமையை விர்த்திசெய்தல், 4. கல்வி கற்பித்தல், 5. மதுவை விலக்கும்படிச் செய்தல். நல்ல கிரந்தங்கள் எல்லா ஜனங்களுக்கும் கிடைக்கும்பொருட்டு 'சுலுவசமாசாரம்' என்ற ஓர் வாரப்பத்திரிகை யேற்படுத்தினார். இதன் விலை கால் அணா. பெண்களின் விருத்தியின் பொருட்டு ஒரு பள்ளிக்கூட மேற்படுத்தியதோடு 'பாம்தேசினி சபை' என்று ஒரு சபையு மேற்படுத்தினார். தொழில்களைக்கற்பிக்கும்பொருட்டு கைத்தொழிற் சாலைகளு மேற்படுத்தினார். 1874-ம்வருஷத்தில் பிரம்மோ சமாஜங்களிலுள்ளவர்கள் யாவரையும் ஒன்றாக சேர்க்கப் பிரயத்தனப்பட்டார். இதற்காக 'பரதஆசிரமம்' என ஒன்றேற்படுத்தினார். இதில் வெளி நகரங்களிலுள்ள பிரம்மோக்களின் மனைவிகளும் மக்கள்களு மனுப்பப்பட்டு மதவிஷயமான கல்வி கற்பிக்கப்பட்டார்கள். அவ்வருஷம் மார்ச்சுமாதத்தில்தான் பிரம்மோ கலியாண ஆக்ட்டும், சட்டமாயிற்று. பிறகு 4-வருஷகாலம் பிரம்மோசமாஜத்தை விருத்தி செய்வதில் தம் கவனத்தைச் செலுத்தினார்.

1877-ம் வருஷத்தில் கல்கத்தாவில் ஒரு பெரிய கட்டிடம் வாங்கி அதில் வசித்தார். அவ்வீட்டின் பிரதான அறையை தன்னைச்சேர்ந்த பிரம்மோக்களாகிய புருஷர்களுக்கும் ஸ்திரிகளுக்கும் கொடுத்துவிட்டார். இவர டிக்கடி பிரம்மோவிதிகளுக்கு மாறாகக் காரியங்களைச் செய்வார். ஏனென்று கேட்டால் அப்படி செய்யவேண்டுமென்பது தெய்வகட்டளை யென்பார். இது தம்மைச்சேர்ந்த அனேகர்களுக்கு அதிருப்தியை யுண்டாக்கிற்று. இந்த சமயத்தில் தம் 14-வயது குமாரத்தியை 17 வயதுள்ள கச்பிகார் மகாராஜாவுக்குக் கலியாணம் செய்தார். இது பிரம்மோ கலியாண விதிக்கு மாறானது. ஆகையாலிவர் சமாஜத்திற்குக் குருவாயிருக்க லாயக்கில்லாதவரென நினைத்து அவரைத்தள்ள முயன்றார்கள். ஆனாலிவர் பலாத்காரமாகப் போலீசின் உத

வியைக்கொண்டு தம் ஸ்தானத்தை விடாமலிருந்தார். ஆயினும் பேதமுண்டாய்விட்டபடியா லிவர் 1878-ம்வருஷம் மே மாதத்தில் 'சாதரண பிரம்மோ சமாஜ்' என்று ஒரு புதிய சமாஜத்தை ஸ்தாபித்தார். 1882-ம் வருஷமுதல் இவருக்குத் தேகத்திலொரு நடுக்கமுண்டாயிற்று. சிலவேளைகளில் ஆயாசமாய்க் கீழே விழுவர். 1883-ம் வருஷத்தில் வைத்தியர்கள் இவரை கல்கத்தாவிலிருந்து ஸிம்லாவிற்குப் போயிருக்கச் சொன்னார்கள். 6, 7, மாதங்களுக்குப் பின்னர் இவர் கல்கத்தா திரும்பி வந்தார். 1884-ம் வருஷம் ஜனவரி மாதம் 8-ம் தெய்தி இவ்வுலக வாழ்க்கையை விட்டுப் பிரிந்தார்.

இவரிறந்ததால் தமக்குண்டான துக்கத்தை நம் மகாராணியானவர்கள் தம் இந்தியா பிரதிநிதி யாகிய ரிப்பன் பிரபு மூலமாய் கேஷப்பின் குடும்பத்தாருக்கு தெரிவித்தார்கள். ரிப்பன் பிரபுவே இவரிறந்தது இந்தியாவிற்கொரு பெரும் நஷ்டமென வெழுதியிருக்கிறார். இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இச்செய்தி ஆராத்துயரை யுண்டாக்கிற்று.

முற்குறித்த சிறந்த வியாசம் 'சர்வஜன மித்திரன்' பத்திரிகையில் வெளிப்பட்டிருந்ததைச் சிறிது புதுக்கியும், கூட்டியும் வெளிப்படுத்தியுள்ளேன். இது படிப்பவர்களுக்குப் பேரானந்த மூட்டக்கூடிய விஷயமென்பதிற் சந்தேகமே இல்லை.

K. C. துரைசாமி.

NATURAL HISTORY, IV.

ஜீவ சுபாவ தத்துவ விளக்கம்.

SOME HIBERNATING ANIMALS.

யோகஞ் செய்யுஞ் சில ஜீவஜெந்துக்கள்.

ஜர்மானிய தேசத்தவரும் ஜீவாங்க சாஸ்திரத்து மகா நிபுணருமான மாக்ஸ் வெர்வொர்ன் (Max Verworn) என்பவர், மூன்றாண்டுகெட்கு முன்வெளியேற்றிய தமது புத்தக மொன்றில் பின்வரும் வியக்கத்த சம்பவத்தை விவரித்திருக்கின்றனர். அதாவது: வட இந்தியாவில் ஒரூரில் ஆண்டி வேடம் பூண்டு அங்கு மிங்கும் அலைந்து திரியுமொருவ ரிருந்தனர். அவரிருந்த காலம் ஏறக்குறைய இருபது வருடங்கட்கு முன். அவரைச் சுற்றிலு முள்ளோர் அவர் யோக சாஸ்திரத்துக் கைதேர்ந்தவரென்றும், அன்னமின்றி வருஷக் கணக்காகக் காலங் கழிக்க வல்லவரென்றுஞ் சொல்லிக் கொண்டார்கள். இதைக்

கேட்ட ஆங்கிலேயர் மூவர் அவரிடஞ் சென்று தாம் பார்க்க வந்த சமாசாரத்தை அவரிடம் விண்ணப்பஞ் செய்துகொள்ள, யோகியும் இவர்கட் கிணங்கினவராய் "நீங்கள் வேண்டும் விடயத்தை நானே செய்து காட்டொணுது. எனது மாணுக்கருள் ஒருவனைச் செய்யச் சொல்லுகின்றேன்." என்று விடை பகர ஆங்கிலர்க்கு ஆச்சரியமதிகமாயிற்று. உடனே யோகிதமது மாணுக்கருள் ஒருவனை யழைத்துப் படுக்க வைத்துச் சுவாசத்தை யடக்கச் சொன்னுர். வேடிக்கை பார்க்கப்போயிருந்த வெள்ளையர்களுள் ஒருவர் வைத்திய சாஸ்திரந் தேர்ந்தவராதலால் மாணுக்கன் மார்பில் கையை வைத்துப் பார்க்க அவன் சுவாவசம் நின்று நின்று விடுவதையும் அவன் நாடி வரவர மெதுவா யடிப்பதையுங் கண்டார். ஐந்து நிமஷமானதும் மாணுக்கன் பிணம்போற் கிடந்தான். பிறகு அவனை ஒரு பெரும் பையிற் போட்டுக் கட்டி ஓரறையில் வைத்து இரவும் பகலும் ஆங்கிலர் மாற்றி மாற்றிக் காவல் காத்து வந்தார்கள். இடையிடையே வயித்தியர் அப்பிணத்தை உருட்டி யுருட்டிப் பார்ப்பார்; ஒன்றிற்கும் அசைவதில்லை. இங்ஙனம் மூன்று நாள் சென்றன. நான்காவது நாள் காலையில் ஆங்கிலர் யோகியை யழைத்து மூட்டையை அவிழ்த்து விடும்படி கேட்டுக்கொண்டார்கள். யோகியும் அவ்வணமே செய்து மாணுக்கன் காதில் ஏதோ மந்திரம் முணு முணுத்தார். மாணுக்கனும் சிறிது சிறிதாய்ச் சுவாசம் வாங்கி விட ஆரம்பித்தான்; நாடியும் மெல்ல மெல்ல அடிக்க ஆரம்பித்தது. இரண்டு மூன்று நிமிஷமானதும் தூக்கத்தினின்று மெழுந்தவன் போல் மாணுக்கன் எழுந்து உட்கார்ந்தான். வியப்படைந்து எதிரில் நின்று நோக்கு மாங்கிலர்க்கு அவன் தேகஞ் சிறிது மெலிந்ததாகவே காணப்படவில்லை. ஒருவரை யொருவர் ஏறிட்டுப் பார்த்து இவ்வதிசயத்துக்குக் காரணங் கண்டிலாராய், யோகிக்கு வந்தனமிட்டு, வந்த வழி பார்த்துத் திரும்பினுர்கள்.

இச்சிறு கதையை வாசித்ததும் எமக்குண்டான ஆச்சரியம் அளவிடத் தக்கதன்று. ஆனுல் இது நம்பக்கூடியதா என்று வினவுவார்க்கு ஜர்மானிய நிபுணர் கொடுக்கும் உத்தரமே தகுதியுடைத்து. இக்கதை நம்பக்கூடியதோ அன்ருே? இத்தகைய திறமை மனிதனுக்கு வாய்க்கக் கூடியதே. ஏனெனில் மனிதனிலுங் கீழ்ப்பட்ட எவ்வளவோ ஜீவராசிகளினிடத்து இச்சக்திமிகுதியு மிருப்பதாதலின்.

நம்மவர்களோ இக்கதையை உடனே நம்புவார்கள். இவ்விதம் அன்னமின்றிச் சுவாசமின்றி நாள்கணக்காகவும் மாதக்கணக்காகவும் வருடக்கணக்காகவும் காலங்கழிக்கும் பல யோகிகள் நம்பரத கண்டத்துளர் என்று அவர்கள் பல முறையுஞ் சொல்ல நாங் கேட்டிருக்கின்ருேம்.

மற்றெத்துணையோ விடயங்கள் மானிடர்க்குக் கீழ்ப்பட்ட பிராணிகளிடமிருந்து அவர்கள் கற்றிருப்பதுபோல் இவ்வற்புதத் திறமும் அவற்றினிட

மிருந்தே யோகிகள் அறிந்தார்களென்பது எமது கொள்கை. இதற்குதாரண மாகச் சில ஜீவப் பிராணிகள் யோகஞ் செய்வதைப் பற்றிச் சில சொல்லு வோம்.

நமது "பங்களா"வைச்சுற்றி மாரிகாலத் திரவில் "க்ணங் க்ணங் கணக்ண" வென்று சுரம் வைத்துப் பாடும் தவளையை நம்மவர்களிற் பலருங் கண்டிருப்பார்கள். அதற்கு வயிறு பெருத்துத் தலை சிறுத்திருக்கும். அதுகண் ணைப் பறிக்கு மழகிய வர்ணந் தீட்டப்பட்டது. வெகு துரிதமாய் மண்ணைப் பறிக்குங் கால்களுடையது. அது வாய்விட்டிடும் அகோரமான சத்தம் ஆண் பெண்ணை யழைக்கு மற்புதச் சங்கீதமாம். இரண்டங்குல மழையாவது பெய் தாற்றான் தரையின் கீழிருந்து மேல்வரும். மற்றையக் காலங்களில் தரை மட்டத்திற்குக் கீழ் மூன்று நான்கடி தாழ்ந்து பாழில் வசிக்கும். தரையின் மேல் நான்கு மாதமும் தரையின் கீழ் எட்டு மாதமுங் காலங் கழிக்கின்றது. மாரிகாலத்து மாத்திரந்தான் உண்பதும் ஆண் பெண் சேர்ந்து வாழ்வதும் குஞ்சு பொரிப்பதுமாம். கோடை முழுவதும் தரையின் கீழ், அன்னாகார மின்றிச் சுவாசம் நிறுத்தி அகோரமான யோகத்திலிருக்கும். அது செய்யும் யோகம் பற்றியன்றே இந்திரன் இரங்கி மழை பொழிகிறான். இந்த வருடம் மாரிகாலத்தும் மழையில்லாது போனதற்கு இத்தவளையின் யோகம் சிறிது குன்றி யிருக்க வேண்டு மென்பது எமது அபிப்பிராயம்.

மாரிகால முழுவதும் பனிக்கட்டியால் மூடப்பட்ட உத்தரப் பிரதேசங் களில் உள்ள வெண்கரடி முதலிய சில பிராணிகள் அம்மாரிகாலஞ் செல்லு மட்டும் அன்னமாகார மின்றி மண்ணிற் குடையப்பட்ட பெரும் வளைகளுள் பதிந்து கிடக்கும். ஆதிபன் அனுக்கிரகத்தால் சிறிது உஷ்ணம் பட்டு பனிக் கட்டிக ளுடைந்து அவை நீங்கித் தரை கண்ணுக்குப் புலப்படவே ஆறு ஏழு மாதமாக யோகஞ் செய்து கொண்டிருந்த இப்பிராணிகள் மிகக் களிப்புடன் வெளிப்போம். மானுட யோகிகள் தேஜோ மயமான கடவுளைக் காணுதற் பொருட்டு யோகத்தி லிறங்குகிறார்கள். இச்சீவ ஜெந்துக்களோ தம்முடைய ஒளியால் இருட்டை நீக்கி உலக முழுவதையும் உற்சாகப் படுத்துஞ் சூரிய னைக் காண்டற்குத் தரையின் கீழ்த் தவம்புரிகின்றன.

வேறு சில பிராணிகள் வருஷக் கணக்காக உறக்கங் கொள்ளும். இவற் றைப் பார்க்கப் பூதக்கண்ணாடி யுபயோகிக்க வேண்டும். ஆறுகளிலும் குளங் களிலும் ஏரிகளிலும் அபரிதமிதமாயுண்டு. இவை யங்கு மிங்கும் நடப்பதற்கு ஏதுவாயிருப்பது இவற்றின் தலையின் கீழ் சக்கரம்போன்ற ஓர் அங்கம். அவ் வங்கம் ஓயாது சுழலுவதால் இவற்றிற்குச் சக்கரக் கிருமிகள் (wheel animal-cules) என்று பெயர்.

இச்சிறு பிராணிகளுள் சிலவற்றைப் பிடித்து ஒரு சமமான வெள்ளைக் கண்ணாடித் துண்டின்மேல் சிறிது தண்ணீரோடு வைத்து பூதக் கண்ணாடி

யால் நோக்க, தண்ணீருள்ளளவும் கண்ணாடியின் மேல் அங்குமிங்கு மோடும். தண்ணீர் சிறிது சிறிதாய் நீராவியாக மாறவே இவற்றின் சுறு சுறுப்பும் விற்கத் தொடங்கும். கடைசியில் நீர் முழுவதும் மறையவே, இவை தஞ்சக்கர வங்கத்தை உள்ளிழுத்து, ஓடுதல் நின்று, உயிரிழந்த பிணம்போல் கிடக்கும். அவ்வமயத்துத் தம்மைச் சுற்றிக் கண்ணாடி போன்ற ஒருவஸ்துவால் ஒரு கூடு கட்டிக்கொள்ளும். அக்கூட்டி லிருக்கும் காலத்து உண்ணுவதில்லை ; சுவாசம் விடுவதில்லை ; ஓரே உறக்கந்தான். இக்கூட்டிற்குள் மூன்று வருஷப் போது இருக்கும். பிறகு முன்போல ஒரு கண்ணாடியின் மேல் வைத்துச் சிறிது தண்ணீர் சேர்த்து பூதக் கண்ணாடியால் பார்த்தால், கூடுடைந்து இச்சிறு பிராணிகள் வெகு சுறு சுறுப்பாய் வெளியிற் போந்து, சிறையினின்று விடுபட்டவன் போல் ஆனந்தத்துடன் ஆடும்.

இவை இவ்வண்ணம் உயிர் காப்பாற்றிக் கொள்வதற்குக் காரணம் என்னையோ வெனின், ஆறு குளங்கள் மாதக் கணக்காய்த் தண்ணீர் வற்றிப் போகின்றன. அக்காலத்து இப்பிராணிகள் தம்மை வேறு எவ்விதத்தால் காப்பாற்றிக் கொள்ளும் ? சிறு கூட்டிற்குள் ஆறு ஏரிகளில் தண்ணீர் வருமளவும் அபாயமின்றி வாழும்.

இவ்விடயத்தைக் குறித்துப் பின்னொரமயத்து இன்னுஞ் சில சொல்லுவோம்.

V. N. ஐயங்கார்.

THE ORIGIN OF KODUNGALLUR TEMPLE.
கொடுங்கல்லூர் ஆலயவரலாறு.

(19ம்-பக்கம் தொடர்ச்சி)

இப்பொழுது கதாரம்பம் - நாம் வரையத்துணிந்த காலத்துவக்கத்தில் சோழதேசத் தலைநகரில் மாசாத்துவன் என்றும் மாநாய்கன் என்றும் இரண்டு வர்த்தகர்களிருந்தார்கள். அத்துறைமுகத்தில் உள்ள கப்பல்களிற் பாதியும் இவர்களுக்குச் சொந்தமாயிருந்தது. பெரிக்கிள்ஸ் என்பவரின் கீழ் எத்தன்ஸும் ஆகஸ்தஸன் கீழ்ரோமும்எத்தன்மையாய்ப்பெருமையடைந்திருந்தனவோ அத்தன்மையாய் இவர்களின் முன்னோர்களால் இந்நகரும் சிறப்படைந்திருந்தது. இவர்களில் முற்கூறப்பட்டவருக்குச் சகல கலைகளிலும் தேர்ந்தவனும் நற்குணங்களில் வாய்ந்தவனுமான 16 வயதுடைய ஓர்புதல்வனும், மற்றவருக்கு அடக்கம் ஒழுக்கம் முதலிய கற்பிலக்கணங்களும் (கண்-நகை) கண்ணகை என்னும் பெயர்க்குரிய பேரெழிலும் உடைய ஒரு புதல்வியும் உண்டாயிருந்தார்கள். இவ்விரு மகப்பேற்றால் பெருங்களிப்படைந்த

தாய் தந்தையர்கள் இவர்களுக்கு மணம்புரிவிக்க எண்ணங்கொண்டு தங்கள் பெருந்தன்மைக்குத் தக்கபடி ஏராளமான பணச்செலவுசெய்து வெகு விமரிசையாக மணம் முடித்தார். ஓர் பிரத்தியெக மாளிகை தீர்ப்பித்து அங்கே கோலாகலத்துடன் வாழ்ந்திருக்க மேலான சாமான்கள் சாலவும் அமைத்துப் புதுமணம் புரிந்த இச்செல்வமக்களைக் குடிபுகுத்தினார்கள். இருவரும் அங்கே சமாதானத்துடன் அமர்ந்து தத்துவஞானிகளுக்கு உண்டி முதலியன அளித்தும், இகத்தைத் துறந்தோருக்கு வழிபாடியற்றியும், விருந்தினர்களை ஆதரித்தும் வந்தார்கள். இவ்வாறு கொஞ்சக்காலம் செல்லலும், அவ்வூர் அரசன் மாதவி என்னும் ஓர்தாசியின் நாட்டிய அரங்கேற்றத்தின் பொருட்டுக் கூட்டுவித்த ஒரு சதிர்க்கூட்டத்துக்குக் கண்ணகையின் காதலனான கோவலன் போகநேர்ந்தது. அம்மாதின் கட்டழகைக் கண்ணுற்ற கோவலன், மாது சிரோமணியாகிய தன் நாயகியைத் துறந்து, எப்பொழுதும் மாதவியின் சமீபத்திலிருப்பதைச் சுகமென மதித்துத், தன்னுடையவும் நாயகியுடையவும் அளப்பிலாச் செல்வத்தையும் அவள்பொருட்டு அழிக்கும் வண்ணம் அவள் மீது அவ்வளவு காதல்கொண்டான். அக்காலத்தில் அரசன் இந்திரனுக்காக ஆண்டுதோறும் உற்சவம் நடத்துவதும், அது முடிவாகிற கடலாட்டு அல்லது ஆருட்டுதினத்தில் ஜனங்கள் திரளாகக் கடற்கரையோரமாய்க் கூடி அவ்விழாவைக் கொண்டாடுவதும் வழக்கமாயிருந்தது. அத்தினத்தில் கோவலன் தன் காமக்கிழத்தியுடன் அதிக சந்தோஷம் கொண்டாடினான். இருவர்களும் சங்கீதத்தில் தேர்ச்சி யடைந்தவர்களானபடியால், இடை யிடையே லீட்டு விட்டுப்பாடியும் வீணகானஞ்செய்தும் ஒருவரை யொருவர் திருப்தி செய்ய முயன்றார்கள். அவர்கள் இவ்விதமாய்க் களித்திருக்குந் தருவாயில் அவன் இவளைப் பெரும் பக்தியுடன் குலதெய்வமென எண்ணியிருந்தும் அதைக் கவனியாது மாதவியுடைய மனம் வேறொரு புருஷன்பாற் சென்றதை அவளுடைய ஒரு பாட்டினின்றும் அவன் குறிப்பாக அறிந்துகொண்டான். உடன் அவளைவிட்டுநீங்கித்தன்வீட்டை யடையப்பத்தினியாவாள் ஆதரவுடன் அவனடிபணிந்து நாயகன் முகம்வாடியிருப்பதின் காரணம் யாதென விசாரித்தாள். 'நம்முடைய சொத்துக்களையெல்லாம் வாரியெறித்து உன்னையும் வறுமைக்குள் ளாக்கிவிட்டேன் என்ற கவலைதான் என்மனதை வாட்டுகின்றது' என்று மறுமொழிகூறினான். இதனால் தன் கணவன் கையில் மாதவிக்குக்கொடுக்க ஒன்றுமில்லாததினால் விசனமடைந்திருப்பதாகக் கண்ணகை நினைத்துத் தன்னுடைய சிலம்புகள் இரண்டுமிருப்பதாகவும் அவற்றை அவர் சித்தத்துக்கிசைந்தபடி செய்யலாமென்றும் சொன்னாள். அகதியான கோவலனுடைய வாடியமனதை இம்மொழியானது மலரச்செய்தது. அவன் தன் தப்பிதம் உணர்ந்த மனதோடு அவளை நோக்கி அச்சிலம்புகளை விற்று வர்த்தகம் ஆரம்பித்து இழந்த பொருள்களைப் பின்னும் சம்பாதிப்பதாகவும், அவனாகவே வருவித்துக்கொண்ட அந்நிலைமையில் சுதேசமாகிய அங்கிருக்க மனம்

கூசுகின்றதாகவும், அதற்காக மதுரைக்குப் போகவேண்டுமென்றுங் கூறித் தென் திசையிலிருக்கும் அப்பெரிய பட்டணத்துக்கு அவளையும் வரவேண் டுமென்று கெஞ்சினன்.

அவளோ தன் நாயகன் கட்டளையை ஒரு பொழுதும் கடவாத உத்தமி யாயிருந்ததினல் இடைக்காலத்தில் அவனல் தனக்குண்டான துன்பங்களையும் கவனியாமல் உடனே தானே ஒத்துக்கொண்டாள். கோவலன் கண்ணகை இவர்களின் தாய் தந்தையர்கள் முன்போலவே அளவற்ற செல்வவந்தர்களா யிருந்தபடியால், கோவலன் தன் நடவடிக்கையைச் சீர்திருத்தும் பட்சத்தில் அவனுக்கு இழந்துபோன பொருள்களை மறுபடியு மளிக்கச் சித்தமாயிருந்தா ர்கள். பின் சந்ததியாரும் கொண்டாடத்தக்க விதத்தில் பெரும் புகழொடு காலந்தள்ளத்தக்க ஆற்றல் அவர்களுக்குண்டோ என்று சோதிக்கும்பொரு ட்டே இந்துக் குடித்தன முறைமைக்கு மாருக இவ்விளந் தம்பதிகளுக்கு தனி வீடு கொடுக்கப்பட்டது. முகத்துதிக்காரன், பிரியவாதி, கோடன், விலைமா தர்கள் இவர்களின் செயற்கையிலிருந்தும் தன் அபிமானத்தைப் பறிகொடு க்காத கோவலன் சென்ற நடக்கையின் பிரதிகாரமாக மேல் நல்ல விதமாகக் காலந்தள்ளத் திட்டஞ் செய்துகொண்டான், இவ்வெண்ணத்துடன் கண் ணகையோடு நடுராத்திரி கால்நடையாகப் பிரயாணமாயினன். ஆனல் இவர்கள் கால்நடையாகச் செல்லப் பழகினவரல்லர். இரவெல்லாம் மிகப் பிரயாசத்துடன் நடந்து, மறுநாட்காலையில் கவந்தி அடிகள் என்னும் ஒரு க்ஷமண சன்னியாஸி அம்மாளைச் சந்திக்க, அந்த அம்மாள் இவர்களுக்கு மது ரைவரையிலுள்ள யாத்திரைக்குத் துணைவியாகவும், வழி காட்டுகிறவளாகவும், தத்துவ உபதேசினியாகவும் ஏற்பட்டாள். இந்த யுவப்பிரயாணிகள் உறை யூரை அடைந்தவுடன் மாதவியினிடத்துத் தாய் தந்தையர்களிடத்து மிருந்து அனுப்பப்பட்ட ஒருதூதன் இவர்கள் பால்வந்து மக்கற் பிரிவாற்ருமையால் மேல்கூறின தாய்தந்தையர்கள் மிகவாடி நொந் தார்களென்றும், இவர்களுடைய வரவினல் அவர்களுக்குச் சோர்வு நீங்கு மென்றும் அறிவித்தான். ஆயினும் அவர்களுடைய தீர்மானம் மாற் றக் கூடாததாயிருந்தது. தாய் தந்தையர்களுக்கு இத்தீர்மானத்தையும் அன்பார்ந்த வந்தனத்தையும் சொல்லும்படி ஏற்பாடுசெய்து, தூதனைத் திரும்ப அனுப்பிவிட்டார்கள். இவ்வாறு அநேகநாள் பெருங்கஷ்டத்தோடு யாத்திரைசெய்து கடைசியாய் வைகைக்கரையில்வந்து சேர்ந்தார்கள். இப்பிரயாணத்தில் கண்ணகையின் மெல்லிய அடிகள் பாதையின் சிர்கேட்டி னுலும் முட்களாலும் மிக வருத்தமடைந்தன. அன்றிரவில் மதுரைக்கோ ட்டைக்குவெளியில் பிராமணர்களுடைய வீட்டில் தங்கினர்கள். காலையில் கவந்தி அம்மாள் தக்க இடம் விசாரித்து மாத்தரை என்ற குணவதியான கோபஸ்திரீயினுடைய வீட்டை நிச்சயம் செய்தாள். பிறகு இவர்களின் வர

லாறு கூறி உபசரிக்கவேண்டிய முறைமையையும் அவளுக்குச்சொன்னாள். ஜீவகாருண்ணியம் மிக்குடைய மாத்தரையானவள் அவர்களைக் களிப்புடன் உபசரித்து அவர்களுக்கு ஒரு தனிப்புதுமனை ஒழித்துக்கொடுத்து அய்ய என்ற தன்னுடைய குமாரத்தியையும் கண்ணகைக்கு வேண்டிய ஊழியம் செய்யும்படி கட்டளையிட்டாள். ராஜரீகத்துக்கடுத்த உயர்ந்த ஸ்தானம் வகிக்கிற கிரகப்பெண்ணானதால் பாகசாஸ்திரத்தில் பழக்கமற்றவளா யிருந்தும், இந்து மனையாட்டிகளுக்கு அடையாளமான கற்பின் உதவியால் மிகுநேர்த்தியான அமுதுசெய்யச் சக்தியடைந்தாள். சாலமான உடனே அவள் நாயகனை நீராட்டுவித்து ஓர் ஆஸனத்தில் வீற்றிருக்கச்செய்து, பாதசுத்திபண்ணி, அடி பணிந்து, அந்நீரைப் பக்தியுடன் சிலத்தில் கொட்டி கன்னி வாழைக் குருத்திலையில் அமுது படைத்தாள். கோவலன் அறுசுவையோடுண்டு தாம்பூல மருந்தித் தன் நாயகியை அருகில் அழைத்துக் கட்டித் தழுவித் தன்னால் முன் நேரிட்ட துன்பங்களையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் மன்னிக்க வேண்டுமென்று கேட்டான். விதியின் பயனால் தற்காலத்தில் தங்களுக்கு நேரிட்டிருக்கும் நிலைமையைப் பற்றி இருவரும் மனம் நொந்தார்கள். சென்ற காலத்தைப் பற்றிச் சிந்திப்பதிற் பயனில்லை என்றறிந்த கோவலன் தன் நாயகியைத் தேற்றிச் சிலம்புகளில் ஒன்றை வாங்கிக்கொண்டு பத்தினியைமாத்தரையிடம் ஒப்புவித்து விதிவலியால் நடத்தப்பட்டுப்போனான். அக்காலத்தில் மாத்தரை யானவள் அபாக்கியவதியான கண்ணகையின் மனக்களிப்புக்காகத் தன் இனஸ்திரீகளை வரவழைத்துச் சதிர்மேளந் துடங்கினாள். கோவலன் தன் வெளிப்பிரயாணத்தில் அனேகரைக் கண்ணுற்றானாயினும் தன் கவனத்தை இழுக்கத் தக்கதாக முதன் முதல் நூறு பேர்களுடன் போய்க்கொண்டிருந்த ஒரு அரண்மனைத் தட்டானைக் கண்டான். அவன் அணிந்திருக்கும் ஆடை, கைவசமிருந்த சாமனம், பிரபுத்தன்மையுடைய கோவலனிடத்தில் அவன் காண்பித்த வினயம் இவைகளால் அவன் அரண்மனைத் தட்டான் என்று ஊகித்தறிந்து கோவலன்சொன்னதாவது:- "பட்டமகிஷி அணியத்தக்க ஒரு ஆபரணம் என்னிட மிருக்கிறது. அதன் விலை இன்னதென்று சொல்ல முடியுமா?" இம்மொழி கேட்டுத் தட்டான் கோவலனுக்கு வணக்க பாவம் காட்டி அந்த ஆபரணத்தை விலை மதிக்கச் சக்தியற்றவனா யிருந்தாலும், ராஜ கிரீடம் முதல் குறைந்த நகைவரையிலும் உண்டு பண்ணி யிருப்பதாய் மறுமொழியும் கூறினான். இதைக்கேட்ட ஏழையான கோவலன் தன்னிட மிருந்த மூட்டையை அவிழ்த்துச் சிலம்பை எடுத்துத் தட்டான் கையிற் கொடுக்க அவன் அதை வாங்கிப் பார்த்துத் திகைத்த திருடன்போல நமக்கு ஒரு நல்ல இரை கிடைத்தது என்று எண்ணினான். கொஞ்சநேரம் பரிசோதித்து மிகவும் ஆச்சரியப் பட்டவனாகி "இது என்ன விசேட நகை! ராஜ திருமேனிகள் அணியத்தக்கது" என்று உரைத்துச் சென்றான். பிறகு

அதை அரசனிடத்திற் காண்பிக்க அனுமதி கேட்டு, போய்வரும் வரை அவனுடைய எளிய குடிசையிற் றங்கி யிருக்கும்படி கெஞ்சினன். கோவலனும் சம்மதித்தான்.

அப்படியே தட்டான் கோவலனைத் தன் வீட்டுக் கருகாமையில் தேவ கோட்டம் என்னும் அறைக்குள் போகச் செய்தான். ஆனல் கோவலன் அவ்வறையினின்றும் வெளியேறு வண்ணம் தக்க பந்தோபஸ்துச் செய்தல்லாமல் அரண்மனைக்குப் போக மனம்வராது தட்டழிந்தான். (கதைத் தொடர்ச்சியைப் பின் பற்றுவதற்கு முன் இங்கே வாசிப்பவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய ஒரு வரலாறுண்டு. ராஜ பத்தினியின் சிலம்பை அற்ற குற்றம் தீர்க்கத் தட்டானிடம் கொடுக்கப்பட்டது. அவன் அதைச் சுண்ணும்புதேய்த்து வெயிலில் உலரவைத்திருக்க ஒரு பெரிய கழுகு அதை எடுத்துப் பறந்து விட்டது. நடந்த இவ்வுண்மையை அரசனிடம் தெரிவித்தால் நம்பமாட்டார் என்று பயந்து அதை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டதாகவும் திரும்ப அதை எவ்விதமும் வருத்திக் கொடுப்பதாகவும் தெரிவித் திருந்தான். கோவலனிடத்தில் இந்த நகையைக் கண்ட பொழுது அவனைக் கழுமரத்துக்கு இரையாக்கித் தன் ஆபத்தை நீக்கிக் கொள்ளலாமென்று எண்ணினன்.) கோவலனுடைய விதிப்பயனல் தட்டான் அரசனிடத்திற் போன பொழுது, அவர் காரியங்களை அமைதியாய் விதானிக்கத்தக்க மன நிலைவையி லிருக்கவில்லை. ஏனென்றல் தலை நாளிரவில் இவர் ஒரு தாசியின் சதிரில் இருக்க, ராஜ பத்தினி அவர் விலை மாதின் சேர்க்கையில், இருந்தாரென ஐயுற்றுக் கோபங் கொண்டாள். ராஜன் அமைச்சர்களோடு மந்திரா லோசனையில் இருக்கும் பொழுது தன்நாயகினுடைய மனக்கடுப்பை அவருக்கு அறிக்கை செய்து உடனே சபையை நிறுத்தி விட்டு அந்தப்புரத்திக்குப் போனர். போகும் வழியில் தட்டான் குறுக்கிடவும், காரியம் என்னவென்று துரிதமாய்க் கேட்க முன் இராணியின் சிலம்பைத் திருடினவன் கள்வன் காவலாளிக்குப் பயந்து தன் வீட்டில் ஒளித்திருக்கிறன் என்று கூறவும் நேர்ந்தது. அரசன் உடனே காவலாளிகளை வரவழைத்து அரண்மனைத் தட்டான் சொல்லுகிற மனிதனிடத்தில் சிலம்பு இருக்குமாயின் அதை வாங்கி க்கொண்டு அவன் உயிரையும் வாங்கிவிடும்கட்டளையிட்டான். காவலாளிகள் உடனே தட்டானேடு வீட்டிற்குச் செல்ல அங்கே ஒரு அறையில் பெருந்தன்மையுடைய ஒருவனைக்கண்ணுற்றார்கள். அரசன் கட்டளையைக் கவனியாது அவனைத் திருடன் என நம்பாதவர்களாகித் தங்களுக்கு ஒப்புவித்த வேலையைநடத்த மனவற்றர்களாயிருந்தார்கள். மாயத்தனத்திலுந் திருட்டிலுந்தேர்ந்தவனன தட்டான் திருடர்களுடையவும் கொள்ளைக்காரர்களுடையவும் ஜாலத்தைப் பற்றிக் காவலாளிகளுக்குப் பிரசங்கஞ் செய்தான். திருட்டுத்தனத்தை எட்டுப் பிரிவாய்ப் பகுத்து ஒவ்வொன்றின் கருத்தையும் வெளியிட்டுக் கால நிலைமைக்குத்தக்கபடி திருடர்கள் அடிக்

கடி தரிக்கும் வேஷங்களையும், கைக்கொள்ளும் மன நிலைமையையும் குறித்துச் போதனை செய்தான். கோவலனைக் காவலிலிருந்து வேறுபடுத்தியதனால் இந்த ஸம்பாஷணைக ளெல்லாம் அவனுக்குப் புலப்படாமல் நடந்தன. தட்டான் கோவலனுக்கு ஒரு சமாதான மறுமொழியையுங்கூட உரைக்கத் தருணம் கொடுக்காமல் இந்த நியாயாதிபதிகள் சிலம்பைப் பரிசோதித்துத் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட அரசனால் நியமிக்கப்பட்ட பஞ்சாயத்தார் என்றே கோவலனுக்குத் தெரிவித்திருந்தான். ஏழையான கோவலன் தட்டானைநம்பி மோசம் போனதுடன் இவர்களுக்குள் தருக்கம் நடந்துகொண்டிருக்கும் பொழுதே மெல்லமெல்லக்கொலைக்களத்துக்குக் கொண்டு போகப்படவுஞ் செய்தான். அங்கே சென்றதும், ராஜபத்தினியி னுடைய சிலம்பைத் திருடின கள்வன் கோவலன்தான் என்று காவலாளிகள் தட்டானால் அறிவுறுத்தப் பட்டார்கள். தலையாரிகளில் சிறுவனான ஒருவன் தன் கத்தியை உருவி கோவலனை ஒரே வெட்டாகவெட்ட அவர்கள் கோவலன் கவந்தத்தை இரத்த வெள்ளத்தில் உருளவிட்டுச் சிலம்பைக்கொண்டு அரசனிடம்கொடுத்தார்கள்.

இக்கொலை நடத்தப்பட்ட இடம் மதுரைக்கும் திருப்பெருங்குன்றத்துக்கு மத்தியிலிருக்கிறதுந் தவிர இக்கொடுங் காட்சி ஸ்தலத்தில் ஞாபகச்சின்னமாக ஒரு கருங்கல் நாட்டப்பட்டு மிருக்கின்றது. இவ்விருத்தாந்தங்கள் இங்கு நடக்குந்தறுவாயில் கோபஸ்திரீயின் வீட்டில் நடந்து கொண்டிருந்த முற்கூறிய ஆடல் பாடல்களும் கோவலன் மரணத்தோடு முடிவுபெற்றன. இச்செய்தி மெல்ல மெல்லக் கண்ணகை செவியிலும் புகுந்தது, புகுந்த மாத்திரத்தில் அவள்பட்ட துன்பத்துக்கு அளவுண்டோ! அன்றியும் இக்குற்றம் பாண்டிய ராஜனால் செய்யப்பட்டதினால் அவள்கோபம் துன்பத்தைப்பார்க்கிலும் பதின் மடங்கானது. காவரிப்பூம் பட்டினத்தில் உயர்குலத்தில் உதித்த செல்வவதியாய் இருந்தபடியால் இந்தப்பெண்மணியை வெளியிற் கண்டவர்கள் இல்லவே இல்லை. தனக்குநேரிட்ட துன்பங்களால் வீறுகொண்ட கண்ணகை தன்னிடத்திலிருந்தமற்றச் சிலம்பைப் பறித்தெடுத்துப் பழிக்குப் பழி வாங்கும்படி புறப்பட்டாள். இக்குலக்கொடிக்கு நேர்ந்த ஆறாத்துன்பத்தின் வன்மையால் ஆதிசேஷனுக்குரிய வாக்குச்சாதுரியம் இவளுக்கு உண்டாயிற்று. போகும்வழியில் ஜனங்களோடும் சுமங்கலிகளோடும் பாண்டி நாட்டு ஆளுகையில் எப்போதாவது இம்மாதிரி அநியாயம் நடந்ததுண்டாவென்று விசாரித்தாள். அம்மங்கையின் மெய்வனப்பும் பெருந்தன்மையுடைய தோற்றமும் அவள் வாய்ப்பேச்சுக்கு அலங்காரம் வருவித்தன. அரசனுடைய ஆலோசனைக் குறைவினால் இம்மாதிரி தீங்கு இம்மாதுக்கு நேர்ந்ததென ஜனங்களுக்கு நன்கு விளங்கிற்று. இம்மாதிரி அநியாயத்தை அந்நாட்டார் ஒரு காலத்தும் அறியாதவர்களாதலால், அவர்களுடைய கோபம் அளவுக்குமிஞ்சினதாயிற்று. அனேகமாயிரம் ஜனங்கள் பின் செல்லப்பெற்ற கண்

ண்கை கொலைக்களமடைந்து தன் கணவனுடையசரீரம் இரண்டுதுண்டாய் இரத்தவெள்ளத்திற் கிடப்பதைப்பார்த்துச் சகியாதவளாய்,முன்னரே சினக் கடலில் ஆழ்ந்திருக்கும் ஜனங்கள் மனம் உருகும்படி முறையிட்டலறினள். அவ்விடமிருந்து அரண்மனைக்குச்சென்று, நாயகனை இழந்த ஒருபெண் அர சனோடு வார்த்தையாட விரும்புவதாய் அரசனுக்குத் தெரிவிக்கச்சொன்னாள். இத்தருவாயில், ராஜபத்தினியானவள் தான் தலைநாளிற் கண்ட கனவை அரசனுக்குத் தெரிவித்துக்கொண்டிருந்தாள். வாயில் காப்போர்களில் ஒரு வன் மிக வணக்கத்துடன் பாண்டியன் அடிபணிந்து அரசன் கட்டளைப்படி அன்று கொலைக்களத்தில் வெட்டுண்ட மனிதனுடைய மனையாட்டி அரச னுடன் வார்த்தையாட ஒரு சிலம்பும் கொண்டு அரண்மனைவாயிலிற் காத்து நிற்பதாக அறிவித்தான். அரசன் கட்டளைப்படி அவள் இரண்டு கன்னங் களிலும் கண்ணீர் ஆறாய் ஒழுகச் சபைக்கு அழைக்கப்பட்டாள். அரசன் அவ ளைப்பார்த்து "நீயார்? இங்குவரக் காரணம்யாது?" என்று வினவ, அவள் மறுமொழி சொன்னதாவது:- "அரசனே! சொல்லெழும் காவிரிப்பூம்பட்டி னம் என் பிறப்பிடம். என் பெயர் கண்ணகை. மாசாத்துவன் என்னும் வர்த் தகராஜனுடைய மகள். கோவலனை நான் விவாகம் புரிந்தேன். விதிப்பயனால் நாங்கள் காலந்தள்ள உன்னுடு அடைந்தோம். என் கணவன் என் சிலம்பு களில் ஒன்றை விற்கப்போகும் வழியில் அவரிடமிருந்து அதையும் பிடித்துப் பறித்து அவரையும் அநியாயமாய்க் கொலைசெய்துவிட்டார்கள்." இது கே ட்ட அரசன் "ஓ, பெண்ணே! திருடனைக்கொல்வது அநியாயமெனல் தகு மோ?" என்று மறுமொழி சொன்னான். கண்ணகை உடன் தெளிவுக்காக தன் னுடைய சிலம்பினுள்ளில் வைரங்கள் நிறைக்கப்பட்டிருக்கின்றன என்று குறி ப்பிட்டுச் சொன்னாள். தன் பத்தினியினுடைய சிலம்பில் முத்துக்கள் நிறை த்திருப்பதாய் ராஜன் அறிந்திருந்தமையால், கோவலனிடமிருந்து வாங் கின சிலம்பை வரவழைத்துக் கண்ணகையினிடம் கொடுத்தான். கோபத்தீ மூண்டெரியும் மனத்தையுடைய கண்ணகை அதை ஒரே அடியில் கண்டது ண்டங்களாக்கி ஜோதிமயமான வயிரங்கள் அரசன்முன் தெறித்துவிழச் செ ய்தாள். இப்பொழுதுதான் பாண்டியனுக்கு உண்மை துலங்கிற்றாகையால் பின்வருமாறு வாய்விட்டலறினான்:—"கீழ்மகனான தட்டான் வாக்கைநம்பின நானும் ஒருஅரசனா! என் வம்சபாரம்பரிய சரித்திரத்தில் முதன்முதல் நான் தான்நீதியில் தவறினவனானேன். என்னுடைய இருதயம் ஏன் பதைக்காது?" என இவ்வாறு புலம்பிக்கொண்டிருக்கும்பொழுதே பிரஞ்ஞையற்று விழுந்து உயிரையிழந்தான். இதைக்கூடவிருந்து கண்ட இராணி கண்ணகையை நமஸ் காரம்பண்ணித் தனக்கிரங்கும்படி கூவி தன் நாயகனைப் பின்பற்றினாள். இங் கே கதை மாறுகின்றது. கண்ணகை அரண்மனையை விட்டுத் தட்டானுடைய வீட்டுக்குள் வந்தாள். அங்கேமதம்வறின ஜனங்கள் திரளாகக்கூடி நிற்பதைக் கண்டாள். இவ்வித இழிவான நிலைமையிலிருப்பதிலும் தன்னைத்தான் மா

ய்த்துக்கொள்வதே நலமென்றும் தனக்குத் தீங்கிழைத்தவரிடம் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்றுந் தீர்மானஞ் செய்துகொண்டும், தன் இடது முலையைத் திருகி அரண்மனைத் தட்டான் வீட்டிலெறிந்தாள். இச்செய்கை ஜனங்களைப் போருக்குத் தூண்ட ஒரு அடையாளமாகவும், அவர்கள் இதுகாறும் அடக்கிவைத்திருந்த கோப உணர்ச்சியை எழுப்பப் போதுமானதாகவும் இருந்ததால், யாவரும் ஒன்றுசேர்ந்து தட்டானைப்பிடித்து ஆணைக்கும் ஆக்கினைக்கும் மீறித்தண்டித்து அவன் வீட்டையும் தீவைத்துக்கொளுத்தினார்கள். இவ்விதமான வீரியச்செய்கைகளை நடத்தியபின் கண்ணகை முன் எண்ணங்கொண்டபடி இறக்கத்துணியவில்லை. அவள் உடன் மதுரையைவிட்டு வைகைக்கரையோரமாய் ஆற்றின் தலைப்பை நோக்கி நடந்தாள். பிறகு சேரனது எல்லைக்குள்வந்து விருக்ஷங்கள் நிறைந்த மேல்காட்ஸ்மலையில் (Western Ghauts) ஒரு வேங்கை மரத்தடியில் தன் உயிரை மாய்த்துக்கொண்டாள். இங்கே மலைவேடர்கள் அவளைச்சந்தித்து அவளுடைய வாக்குமூலமாய் மதுரையிலே நடந்த விருத்தாந்தமெல்லாவற்றையும் அறிந்தார்கள். பெரிய ஆற்றின் கரைவழி செங்குட்டுவ அரசன் வனக்காட்சிக்காக வந்ததும், வேடர்கள் அடியிறை வைத்ததும் இதற்குமுந்தியே வரைந்திருக்கிறோமல்லவா? அவர்கள் இத்தருணத்தில் ராஜன்பத்தினி, இளங்கோவடிகள், சாத்தன்புலவர்—இவர்கள் முன்னிலையில் இந்நாயகியின் சரித்திரத்தைச் சொன்னார்கள். சாத்தன் புலவர் இச்சரித்திரம் நடந்தகாலத்தில் மதுரையில் இருக்கநேர்ந்ததால் விருத்தாந்தங்களை விபரமாகச்சொன்னார். ராஜன் தன்னைப்போன்ற ஒரு அரசனுடைய விசனகரமான கதியைக் கேட்டுத் துக்கித்தான். இராணி கதாநாயகியின் சரித்திரத்தைக்குறித்து வியந்து அவளுடைய வெகுமானத்துக்காக ஒரு ஆலயம் பிரதிஷ்டிக்கும்படி அரசனிடத்தில் வேண்ட, முற்காலத்தில் கொடுங்கல்லூர் என்று பெயர்விளங்கின தற்காலத்திய கிருங்கன்னூரில் ஓர் ஆலயம் கட்டினார். சிலப்பதிகாரம் 27வது அத்தியாயத்தில் இது கூறப்பட்டிருக்கின்றது. கண்ணகையை பத்திரகாளியின் ஒரு அவதாரமாக நினைத்து அவளை அந்த ஆலயத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கின்றது. கண்ணகையின் விக்கிரகப்பணி செய்ய ஒரு தக்கதான கருங்கல் இமயமலையிலிருந்து கொண்டுவரவேண்டிய ஆவசியம் நேர்ந்ததால் செங்குட்டுவன் அவ்விதக்கல்லைக் கொண்டுவருவதற்காக ஒரு யுத்தயாத்திரைக்குப் பிரயாணமாயினார். அரசனால் தலைமை வகிக்கப்பட்ட அந்த யுத்தயாத்திரைப்பட்டாளம் கங்காநதிக்கும் கோதாவரிக்கும் மத்தியில் அநேகம் சிற்றரசர்களோடு போர் புரியவேண்டியதாய் நேர்ந்தது. சாத்தனுடையவேண்டுகோளினால்துறவியான இளவரசு மதுரையில் நடந்த கொடுமைக் கதையை அறம், பொருள், இன்பம், வீடு, என நான்கு பாகமாகப்பிரித்துச் சிலப்பதிகாரமாக விருத்தரூபமாயும் சரித்திர ரூபமாயும் பாடினார். இவர் முதன் மூன்றுபாகங்களை மாத்திரம் சொன்னதால் நான்காம்பாகத்தைச் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சி

யாய் மணிமேகலையில் அமைத்துச் சாத்தனர் பாடினார். கதாநாயகனும் நாயகியும் சுவர்க்கப்பிராப்தியானதாய்ச் சொல்லி யிருப்பதால் இளங்கோவடிகள் இந்தப்பாகம்கூட வருவித்தார்கள் என நம்புகின்றனன்.

T. பொன்னம்பலம் பிள்ளை.

BACON'S ESSAYS, II. DEATH.

வியக்கோன் விரியுரைகள்.

உ-சாக்காடு.

குழவிகள் இருளிற்போக அஞ்சுமாறே மக்களுஉம் சாக்காட்டை அஞ்சுகின்றனர். குழவிகட்கு இயல்பினுள்ள அவ்வச்சமானது (1) கட்டுக் கூட்டுகளான் எவ்வாறு வளருமோ அவ்வாறே (2) மற்றதூஉம். சாக்காடு தீவினையின் உழைப்பு எனவும் மறுமைக்கு வாயில் எனவும் உள்ளுணர்வு கொள்வது தூய்மைக்கும் மெய்வழிப்படுகைக்கும் துணிந்ததொரு குறியே. (இயற்கைக்கு இறுத்தல் வேண்டிய இறை எனச்) சாக்காட்டை அஞ்சுவதோ நொய்ம்மைக்கு ஒரு குறியாம். எனினும் (3) மெய் வழிக்குரிய (a) வினைவு நூல்களிலேயோ (4) வெளிறும் மருட்கோளும் விரவியகலவை ஒரோவழி இருந்துளதாகும். கைவிரலது நுனியை எனினும் நெரிப்பதனான் அல்லது நசுக்குவதனால் தத்தமக்கு உண்டாகும் நோக்காடு எத்துணையது என்று மாந்தர் ஒவ்வொருவரும் தத்தமில் உணர்தல் வேண்டும் என்றும், அதனானே, பூட்சி முழுவதூஉம் அழிபட்டுக் குலைபடும் போழ்து எத்துணை பன்னோக்காடு ஈண்டுமென, (6) வைத்துணர்தல் வேண்டும் என்றும், (7) 'மெய்யொடுக்கல்' எனும் பெயரிய (8) அண்ணர் துறவிகட்குரிய பனுவல்கள் சிலவற்றில் நீவிர் படிப்பதுண்டு. என்றாலும் உடம்பின் ஒருறுப்பை நசுக்குவதனான் உறுவதினும் இழிதாய நோவொடும் பன்முறைகளில் நேரிமொம் சாக்காடு: உயிர்வாழ்வதற்கு இன்றியமையா வுடற் கூறுகள் (நோ) உணர்ச்சியிலே மற்றைய எவ்வற்றிலும் கூரியவல்ல ஆகலான். (9) எட்கிழவனும் (10) இயற்கை மைந்தனும் எனவே யிருந்து ஓதிவந்த (சீநாய்கர் என்ப) வரால்.

---

(1) கட்டுக்கதைகள் எடுத்துக் கட்டுகள் (2) சாவச்சம் (3) சமயத்துக்குரிய (4) வியர்த்தம் (5) விபரீதகொள்கை (6) கற்பித்துக்கொள்ளல் (7) சரீரதண்டம் (8) Friars என்பதன் தாதுப்பொருள் அல்லது முதற்பொருள் (9) எண்ணுக்கு உரிமை பூண்டவன், தத்துவஞானி (10) மாந்தர்க்கு இயல்பினுள்ள அறிவுடையான் மேலறிவு அல்லது இறைவனால் வெளிப்படுத்தியதும் இயற்கைக்கு எட்டியதுமான அறிவு, பெற்றிலன் என்பது புதைபொருள்-(a) தியாகம்,

"(11) சாவணி சாவிற்றானும் பெரிது வெருட்டும்" என நன்று நவிலப் பட்டுளது. (12) அனுக்கங்கள் (13) பேரிழுப்புகள் வெளிறியமுகம் நண்பர் கண்ணீர்விடல் கறுப்பிட்டுக் கதறல் சாக்கடன் செய்தல் ஆகிய இவையும் இன்ன பிறவும் (14) வெருட்டி எனக்காட்டிவிடும் சாக்காட்டை.

2. (15) வீவச்சத்தைக் (16) கோட்டிலடைத்து வென்றி கொளவியலாத அத்துணை (17) நொய்ம்மை (சீற்றப்பாடு, வேட்கைப்பாடு, அச்சப்பாடு என்றற் றொடக்கத்து) (18) உள்ளப்பாடுகளில் ஒன்றுக்கும் இன்றேயாம் என்பது (19) கருத்தொடு நோக்கத்தகும் இன்றாகவே வீவுடன் பொருதி வென்றி கொளவியன்றவரான தொழும்பர் ஒருவர்க்கு இருக்கும் போது வீவென்பது அவர்க்கு வெருடரும் கூத்தகைப் பகைவன் அல்லனும்.

பழிமீட்பு விளிவை வெல்லும்; (20) ஆர்வம் அதை (21) எள்ளும்; மானம் அதை நாடும்; அனுர் அதற்குப் பறக்கும்; அச்சம் அதை முன்னேற எற்கும். இவையே யல்லாமல், (23) விரிசில மன்னனாகிய ஓதான் என்பான் தற்கொலை செய்த பின்னர் (அவனுடைய உழையோருட்) பல்லோரைத் தம் மன்னன் மேற்கொண்ட கலப்பில் (24) பேரினைவினானேயும் (25) அடியராவாருள் உண்மைப்பாலாரினும் உண்மைப்பாலார் முறையினும் இறந்துபட எவியதாமே [எவ்வுணர்வினும் மெல்லுணர்வாகும்] இரக்கம் என்று யாம் படிக்கின்றனம்,

இன்னும் (இளைப்பின்) தேவிட்டையும் (உறைநாளின்) அலுப்பையும் கூட்டிக் கூறுவர் சீநாய்கர்.

"ஏகபாவ கர்மங்களைக் (26) கதிகிருத்வம் புரிந்திருப்பை எனச் சிந்தி: (27) தைரிய சாலி அல்லது (28) துர்ப்பாக்கியனே அன்றி (29) அதித போகியும் மரிக்க ஆசைப்படுதல் கூடும்." ஒருவன் ஒரே செயலை மீட்டும் மீட்டும் பன்முறை செய்யும் இளைப்பினால் வீவை விரும்பக்கூடும் உள்வலியேனும் துயரேனும் இல்லானாய் இருப்பினும்.

3. சாவினது (30) சார்வு (31) உண்ணலாரகத்து எத்துணைச் சிறிது மாற்றஞ் செய்யும் என்பது கருத்தொடு நோக்க இழிதகை உடைத்தன்றாம்; அவர்கள் ஈற்றிமை வரைக்கும்.

---

(11) சாவைச் சூழ்ந்திருக்கும் அணிவகுப்பு சாக்கோலம் முதலியன (12) நெட்டுயிர்ப்பு (13) குறண்டவாங்குதல் இசிவு (14) பயமுறுத்தி (15) மரணபயத்தை (16) இது சதுரங்க பரிபாஷிதம் (17) பலவீனம் (18) மநவிகாரம் பாடு கல்லலுட்டுகை என்பதே ஆங்கில மொழியின் மூலப்பொருள். (19) அவதானிக்க (20) அன்பு (21) அற்பமா யெண்ணும் (22) துயர் துக்கம் (23) சுயாதிபதி சக்கிரவர்த்தி (24) பரிதாபத்தினாலும் (25) அனுசார். (26) எத்தனை முறை (27) இளையாத நெஞ்சன் மறவன் (28) புன்கணாளன் இடுக்கணாளன் (29) உவட்டு களியாளன். (30) அணுகுகை, கிட்டுகை (31) உண் நலம் அல்லது மநவலி உடையார் மாட்டு (32) இரண்டாம் பிரகாரணத்து முதல்வாக்கியத்தை நோக்கி அழிதகையென்றார்.

(33) ஒற்றுமையுளராய்த் தோற்றுவார் ஆகலான். "இலிவியாய் எம்மிந்து சேர்க்கை உள்ளுக, வாழிய, வாழிய," என நன்மொழி நவின்றலும் பொன்னிலை யடைந்தனர் அகத்துயகேசர்.

"உள்ளொளிப்பன்று, ஆண்மையன்ன வலியும் மெய் நலமுமே இவக்காண் அகன்றன தீவிரியனை விட்டு" எனத் தயசித்தர் நுவன்றவாறு உள்ளொளிக்கையிலே (ஒழிந்தனன்) தீவிரியன் (34). கழிமனைமீ திருந்து (35) அடிகள் ஆகின்றேம்யாம் என எண்ணப் படுகின்றது" என்ற நகைச்சொன் நவிற்சியிலே (நாவிழந்தனன்) வெய்ப்பாகியன்.

கழுத்தை நிமிர்த்தி, "அடிமின் உரோமையர்க்கு நயம் உளதாகுமெனின்," எனும் சொற்றொடர்ப் பகர்ச்சியிலே (இவன்றனன்) கால்வன்: "விரைமின் பின்னும் எதும் உளதாயின் எம்மாற்செய்தற்கு," என்னும் பணியிடுகையிலே (பணியிழந்தனன்) சப்த சேவரியன்; இன்றுமுளராம் அன்னவர்.

4. (36) தலைவாயிற் கலைஞர் வீவின்மேல் விஞ்சியகருத்துச் செலுத்தினர் என்பதூஉம் அவர்களால், அழைத்த அரிய பெரிய முன்முயற்சிகள் மிகவும் அச்சுறுத்தியென அதற்குக் காட்சிதந்தன என்பதூஉம் (37) ஒருதலையேயாம்.

"வாழ்நாளின் வரைவை இயற்கை யீகையுள் வைப்பான்" மிகவும் நலம் பட நவிலும்.

பிறப்பது போலவே இறப்பதூஉம் இயற்கை. ஒருசிறு மழவுக்கு இது போலவே அதூஉம் வருத்தமாய் இருத்தல் கூடும்.

(தாக்கிடை) (38) நெய் வெவ்விய போழ்து தழும்புறுவானை ஒக்குமன்றே ஊக்குள தேட்டத்தில் உயிர் துறப்பான். முன்னவன் (முனை) படு மூற்றினை அப்போழ்தைக்கு அரிதிலுணர்வன்! ஆதலானே நலம்படு மியாதினும் வளம்படச்சார்ந்து நிலைப்படு நெஞ்சம் உலப்பின் உய்வை ஒழிக்குமன்றே. ஆண்மகன் ஒருவன் தனக்குள பேறுகளையும் எண்ணங்களையும் பெற்றுள்ளுகும் பொழுது(39) "இவக்காண்வீடல் அளிக்கின்றீர்" எனும்பொருட்கும்சிறியபாவே எவற்றினும் இனியபாவாகு மென்று நம்புக. நல்லிசைக்குவழி திறத்தலும்

---

(33) ஒரேதன்மை (34) மலரேகம் (35) கடவுள் மறம் பொருந்திய மன்னரை இறந்தபின் வணங்கும் பண்டையோர் வழக்குப்பற்றி இவ்வாறு எண்ணினன் போலும் (36) தலைவாயிலின் கண்ணிருந்து ஓதி வந்த ஜீனோ என்பவருடைய அடியார் தலைவாயலார்எனும் பொருட்கும் Stoics என்றழைக்கப்பட்டனர் (37) உறுதி. (38) இரத்தம் (39) இலத்தீன் மொழியுளுள்ளது.

(40) உள்ளொளியை அவித்தலும் ஆகிய இப்பயனும் உளதாகும் இறப்பிலே "வீரியாணத்தின் பின் நேசிக்கப்படுவராம்ஒருவர் (41) தாமே."

S. W. குமாரசுவாமி.

சாத்தந்தையார் மகனார்
கண்ணன் சேந்தனார் செய்த

திணைமொழி ஐம்பது

மூலமும் பழைய வுரையும்.

1-வது குறிஞ்சி.

முதல் இரண்டு பாடல்கள் கிடைக்கவில்லை.

3. கணமுகை கையெனக் காந்தள் கவின
மணமுகை யென்றெண்ணி மந்திகொண் டாடும்
விறன்மலை நாட வரிவரிதாங் கொல்லோ
புனமு மடங்கின காப்பு.

எ-து. செறிப்பறி வுறீஇ வரைவு கடாயது. (இதன் பொருள்) திரட்சியை யுடைய மொட்டுகளைக் கையென்று கருதும்படி காந்தள்க ளழகுபெற வரும்ப, விதன் மணத்தையுடைய முகைகளென்று கருதி மந்திகள் கொண்டாடுகின்ற மிகுதியையுடைய மலை நாடனே! நீ யிங்கு வருதலரிதாங்கொல்லோ! புனங்களுந் தினையரியப்பட்டுக் காவலொழிந்தன. எ-று.

[தொல்காப்பியம், களவியலிலே இதனை நச்சினார்க் கினியார் "தினை விளைந்தமை கூறிச் செறிப்பறிவுறீஇயது" என்பதற் குதாரணமாகக் காட்டியுளர். நச்சினார்க்கினியம் பக்கம் 313.]

4. ஓங்கற் றுறுவரைமேற் காந்தள் கடிகவினப்
பாம்பென வோடி யுருமிடித்துக் கண்டிரங்கும்
பூங்குன்ற நாடன் புணர்ந்தவந் நாட்போல
நீங்கி நெகிழ்ந்த வளை.

---

(40) ஒளவியம் (41) ஜீவிக்கும்போது நேசிக்கப்படாத ஒருவரே என்றது இதன்கருத்து.

என்றது தலைமகன் சிறைப்புறத் தானாகத் தலைமகட்குச் சொல்லுவா ளாய்த் தோழி சொல்லியது.

(இ-ள்.) தலைவியினது பக்கமலைமேற் காந்தள் புதிதாக வழகு பெறுத லா லவற்றின் முகைகளைப் பாம்பென்று கருதிச் சென்றுரு மிடித்தலா லவற் றைப் பிறர் கண்டிரங்குகின்ற பூங்குன்ற நாடன் புணர்ந்த வந்நாள் போலவா யிக் காலத்து நெகிழ்ந்து கழன்ற வெள்வளைகள். எ-று.

[நச்சினார்க்கினியர்—"இது தலைவி இரவுக்குறி நயந்து கூறியது". தொ ல். பொ. ம். பக்கம். 287.]

5. ஏன மிடந்திட்ட வீர்மணி கொண் டெல்லிடைக்
கானவர் மக்கள் கனலெனக் கைகாய்த்தும்
வானுயர் வெற்பன் வருவான்கொ றேழிநம்
மேனி பசப்புக் கெட.

ஏ-து. தலைமகனைத் தோழி யிரவுக்குறி நயப்பித்தது.

(இ-ள்) ஏனவிடத்திட்ட குளிர்ந்த மணிகளைக் கொண்டிரவின்கட் குறவர் மக்கள் தங்குளிர் நீங்கநெ.............வெற்பனிங்கு வருவான் கொ ல்லோ வென்னுடைய தோழிமேனியிற் பசப்புக்கெட. எ-று.

[நச்சினார்க்கினியர்—" இது தலைவன் வருவா னென்றது." தொல் பொ. ம். பக்கம் 306.]

6. விரைகமழ் சாரல் விளைபுனங் காப்பார்
வரையிடை வாரன்மி னையவிரைகடியர்
வில்லினர் வேலர் விரைசெலு மம்பினர்
கல்லிடை வாழ்ந ரெமர்.

எ-து. பின்னின்ற தலைமகனைக் காவன்மிகுதி சொல்லிச் சேட்படுத்தது.

(இ-ள்.) விரைகமழாநின்ற சாரலின்கண் விளைபுனங் காப்பார்கள்; இம் மலையின்கண் வரவேண்டா வையனே. கடுஞ்சொல்லினர், விரைந்து செல லும்அம்பினர் மலையின்கண் வாழ்வாராகிய வெமர் எ-று.

7. யானை யுழலு மணிகிளர் நீள்வரைக்
கானக வாழ்க்கைக் குறவர் மகளிரேம்
மேனலுளைய வருந்தன்மற் றென்னைகொல்
காணினுங் காய்வ ரெமர்.

எ-து. இதுவுமது.

(இ-ள்.) யானைக ளுழன்று திரியுமழகுமிக்க நீள்வரைக் கானகத்து வா ழும் வாழ்க்கையினையுடைய****என்ன பயனுள்ளது? நும்மைக்காணினும்நீர் வந்தீரென்று கேட்பினும் நம்மை வெகுள்வ ரெமர் எ-று.

[நச்சினார்க்கினியர்—'இது தமரை யஞ்சிக் கூறியது.' தொல். பொ. ம். பக்கம் 300.]

8. யாழுங் குழலு முழவு மியைந்தென
வீழு மருவி விறன்மலை நன்னாட
மானைமா னோக்கியு மாற்று ளிரவரி
னூரறி கௌவை தரும்.

எ-து. இரவுக்குறி விலக்கி வரைவு கடாயது.

(இ-ள்.) யாழுங் குழலு முழவுந் தம்முட்பொருந்தி யொலித்தாற்போல விழாநின்ற வருவியை யுடைய மலைநன்னாடனே! மான்போன்ற நோக்கினை யுடையாளு மாற்றமாட்டாள். நீ யிரவின்கண் வருதியாயி னூராரும் பிறகு மலரைத் தரும் எ-று.

9. வேங்கை கமழும் வெறிகமழ் தண்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மகளிரேஞ்
சோர்ந்த குருதி யொழுகமற் றிப்புறம்
போந்த திலையக் களிறு.

எ-து. [நச்சினார்க்கினியர் — "தலைவனைப் பேதைமை யூட்டியது". தொல். பொ. ம். பக்கம் 299.]

இ-ள். வேங்கைமலர்தலான் வெறிகமழாநின்ற தண்சிலம்பின் கண்ணே வளைந்தமூங்கில் போன்ற மெல்லிய தோளையுடைய குறவர் மகளிரேம் யாங்கள். குருதிபாய்ந் தொழுக விவ்விடத்தின்கண் போந்ததில்லை யையனே களிறு எ-று.

10. பிணிநிறந் தீர்ந்து பெரும்பணைத்தோள் வீங்க
வணிமலை நாடன் வருவான்கொ றோழி
கணிநிற வேங்கை கமழ்ந்துவண் டார்க்கும்
மணிநிற மாலைப் பொழுது.

எ-து. தோழி தலைமகனை இரவுக்குறி நயப்பித்தது.

(இ-ள்.) நோயான் வந்த நிறந்தீர்ந்து பெரும்பணைத்தோள் பருப்ப வணி மலை நாடன் வருவான்கொல்லோ தோழி, கணியைப்போல நாட்சொல்லுற்ற வேங்கைமலர்ந்து வண்டுக ளொலியாநின்ற நீல மணிபோன்ற நிறத்தினையு டைய மாலைப் பொழுதின்கண் எ-று.

[நச்சினார்க்கினியர்—'இது தலைவி இரவுக்குறி நயந்து கூறியது'. தொல் பொ. ம். பக்கம் 284.]

11. பலவின் பழம்பெற்ற பைங்கட் கடுவ
னிலவென் றினையிரு மெக்கல்சூழ் வெற்பன்
புலவுங்கொ றோழி புணர்வறிந் தன்னை
செலவுங் கடித்தாள் புனத்து.

எ—து. இது தலைமகன் சிறைப்புறத்தானாகப் படைத்து மொழி கிளவியால் தோழிவரவு கடாயது.

(இ-ள்.) பலாப்பழத்தினைப்பெற்றுப் பசுங்கண்ணினையுடைய குரங்கினுட்கடுவ னெடியென்று தன் கிளையாகிய மந்தியை யழைக்கும் பெற்றிய கற்கள்சூழந்த வெற்ப னம்மையூடுங் கொல்லோதோழி நங்காதலரோடு புணர்ந்த புணர்ச்சியை யறிந்து புனத்துச் செல்லுஞ் செலவினையுந் தவிர்ந்தாள் அன்னையாதல் எ-று.

[நச்சினார்க்கினியர்—இதனை 'மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழி தோழிக்கு-வினைத்தல் சான்ற வருமறை யுயிர்த்தல்' என்றற்கு உதாரணமாகக் காட்டியுள்ளார். தொல். பொ. ம். பக்கம். 276.]

குறிஞ்சி முற்றிற்று.

AS YOU LIKE IT.

"உன்னிஷ்டம் போல"

அல்லது

ராஸ்விண்ட்.

முதல் அங்கம்.

முதற்களம்:—ஆலிவரின் அரண்மனையைச் சார்ந்த ஆராமம்;
பிரவேசம்:—ஆர்லாண்டோவும் ஆடமும்.

ஆர்லா:—என் ஞாபகத்திற் கெட்டிய மட்டில் அது இவ்வாறு எற்பட்டிருந்தது. என்பிதா எனக்கு ஒரு ஆயிரம் கிரவுன்களைப் பிதிரார்ஜித மாக விட்டு என்னைச் சரியாக வளர்க்க வேண்டுவது என் தமயனுடைய கடமை; அவன் அது செய்யத் தப்புவானாயின் தம்முடைய ஆசிர்வாத பயனை இழந்து

போகக்கடவன் என்று குறிப்பிட்டு அவனை நீ சொல்லுகிறபடி எனக்குப் பரிபாலன கர்த்தனாக ஏற்படுத்தினர். எனக்கு நேர்ந்த துன்பத்துக்கெல்லாம் அதுதான் காரணம். அவன் எனக்கு நேர் மூத்தவனான ஜேக்கோசையோ பள்ளிக்கூடத்தில் சேர்த்திருக்கின்றான். அவனும் நன்றாகப் படிக்கின்றான் என்று அனைவரும் சிலாக்கியமாகச் சொல்லிக்கொள்ளுகின்றார்கள்; ஆனால் என்னையோ என்றால் ஓர் நாட்டுப்புறத்தானைப் போல வீடே கதியாக இருத்திவிட்டான். இன்னும் சரியானபடி பார்த்தால் என்னைப் பன்றி முதலிய மிருகங்களோ டொப்பப் பண்ணையில் அடைத்துவைத் திருக்கின்றானென்று சொல்ல வேண்டும். எருத்தைத் தொழுவத்தில் அடைத்துப் பரிபாலித்தலுக்கும் என்னை இவன் நடத்துகிற மாதிரிக்கும் என்னபேதம்? என்னைப் போன்ற உயர்குலச் சிறுவனுக்குச் செய்யும் பரிபாலனம் இதுதானா? என்னை விட அவனுடைய குதிரைகளெல்லாம் நேர்த்தியாகப் பரிபாலிக்கப் படுகின்றன; ஏனென்றால் அவைகட்குச் சரியான தீனி போடுவதுடன் நடையும் பழக்குகின்றார்கள். அதற்கென்றே அனேகரை அளவற்ற சம்பளத்தில் நியமித்திருக்கின்றான். ஆனால் அவனோடு கூடப் பிறந்த சகோதரனாகிய எனக்கோ என்றால் வயிற்றுக் கேதோ போடுகிறானே அதுவே யன்றி வேறொரு பயனுமில்லை. அவ்வுடல் வளர்ப்புவிஷயத்துக்காக நான் கடமைப்பட்டிருக்கிற அளவுக்கு அவனுடைய எருக்களத்தில் வாழும் மிருகங்களும் கூடக் கடமைப் பட்டிருக்கின்றன. இதைவிட அவன் எனக்கொன்றும் அதிகமாகத் தந்துவிடவில்லை. எனக்கு இயற்கையில் அமைந்துள்ள சொற்ப குணங்களுங் கூட அவனுடைய திருஷ்டிபட்டழிந்துவிடும்போல் இருக்கின்றது. தன் கூலியாட்களுடைய பந்தியில்தான் எனக்குச் சாப்பாடு. சகோதரன் எந்த அந்தஸ்தில் இருக்கவேண்டுமோ அந்த அந்தஸ்தில் இருக்க எனக் கிடந்தருகிற தில்லை. இப்படியெல்லாம் என்னை வளர்த்து என்னிடத்துள்ள இயற்கைக் குணங்களை யெல்லாம் தன்னால் இயன்ற வரையில் தொலைக்கப் பார்க்கின்றான் ஆடம்! இதுதான் என்னை வருத்துவது; என் பிதாவுக்கிருந்த ரோஷம் எனக்கில்லாமற் போகுமா? அந்த ரோஷ குணம் இவ்வடிமைத் தனத்துக்கிணங்கேன் என்னத் தொடங்குகின்றது. அதைப் பரிகரிப்பதற்கு மார்க்கம் இன்னதென்று இன்னும் எனக்குத் தோன்றவில்லை; ஆயினும் இனி ஒரு நிமிஷமும் கூட இச் சங்கடத்தைச் சகித்திருக்க என்னால் முடியாது.

ஆடம்:—அதோ உம் சகோதரராகிய என் எஜமான் வருகின்றார்.

ஆர்லா:—ஆடம்! ஓர் புறத்தொதுங்கிப் போயிருந்து அவன் என்னைநடத்துகிற மாதிரியை நீ உன் காதாரக் கேட்டுக்கொண்டிரு.

[ஆலிவரின் பிரவேசம்].

ஆலி:—ஐய, இப்போது இங்கே யாது புரிகின்றனை?

லா:—ஒன்றுமில்லை; எதுவும்புரிய என்னைப் பழக்கவில்லையே.

ஆலி:—ஆயின் எதைத் தொலைத்துக்கொண் டிருக்கிறாய்? ஐயா.

ஆர்லா:—அபாத்திர சகோதரனாகிய ஈசுர சிருஷ்டியைப் பாழாகத் தொலைக்கும் உமது கிருத்தியத்துக்குச் சகாயமாகச் சோம்பி நிற்கின்றேன்; ஒரு தொழிலும் செய்யவில்லை.

ஆலி:—சோம்பியா நிற்கின்றாய்? நீ நாசமாய்ப்போக; போய் எதாவதொரு வேலையைப் பாரேன்?

ஆர்லா:—உம்முடைய பன்றிகளை மேய்த்து அவைகளுடன் நானும் தவிட்டைத்தின்று வயிறு வளர்க்கட்டுமோ? அப்படிப்பட்ட தாரித்திர தசைக்கு வரத்தக்க கெட்ட குமாரன்போல நானென்ன என் சொத்தையெல்லாம் அழித்து விட்டது?

ஆலி:—நீ எங்கே நிற்கிறாய் என்று தெரியுமா ஐயா?

ஆர்லா:—ஓ! நன்றாகத் தெரியும் ஐயா: இங்குதான், உம்முடைய ஆராமத்தில்.

ஆலி:—யாருக்குமுன்னாலே என்று தெரியுமா ஐயா?

ஆர்லா:—ஓ, நன்றாகத்தெரியும். எனக்குமுன்னால் இருக்கிறவனுக்கு என்னைத் தெரிந்திருக்கிறதைவிட எனக்கு அவனை நன்றாகத் தெரியும். நீ எனது மூத்த தமயனென்று எனக்குத் தெரியும். நாம் இருவரும் இவ்வாறு உயர்குலத்திற் பிறந்த சகோதரர்களாக இருத்தலின் நீரும் என்னை அவ்வாறே கருதவேண்டும். நீர் முதற்பிறந்தவராக இருப்பதால் உலகாசாரப்படி நான் உமக்கு மரியாதை செய்யவேண்டியவன் என்றேற்பட்டிருக்கின்றது. இருபது சகோதரர்கள் நமக்கிடையே பிறந்திருந்தாலும் அவ்வுலகா சாரம் என் பிறப்புரிமையை எடுத்து விடுகிறதில்லை. முன்னாகப் பிறக்க நேர்ந்திருப்பதினால் நம் பிதாவுக்குரிய கவுரவத்தில் பெரும் பாரத்துக்கு உமக்குரிமை யுண்டாயிருக்கிறது என்ற விஷயத்தை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆயினும் என்பிதாவின் அமிசம் உம்மிடத்தில் இருக்கிற அளவு என்னிடத்திலும் இருக்கிறது.

ஆலி:—என்னடா, பயலே சொன்னாய்?

[ஆலிவர் ஆர்லாண்டோவை அடிப்பதற்குக் கையை ஓங்குகின்றான்].

ஆர்லா:—வா அண்ணாவா இதிலேயுங் கூடவா நீ பெரியவன்? ஒரு போதுமில்லை. மிகவும் சிறியவன்.

[கையை ஆலிவரின்மேலே போடுகிறான்].

ஆலி:—நீசப்பயலே என்மேலே கைபோடுவாயா நீ?

ஆர்லா:—நான் நீசனல்ல; சர் ரோலாண்ட்டி பாய்கின் கனிஷ்ட புத்திரன் நான்; அவர் என் பிதா, அப்பிதா நீசப் பிள்ளைகளைப் பெற்றார் என்று சொல்லுகிறவன் மும்மடங்கு நீசனாக இருக்கவேண்டும். நீ என்

சகோதரனாக மட்டும் இருந்திராவிட்டால் இவ்வாறு சொல்லியதற்காக உன்னுடைய நாவை மற்றொருகையாற் பிடுங்கி எறியும் வரை இக்கையை உன்னுடைய கழுத்தை விட்டு எடுக்கவே மாட்டேன்; உன் வாக்காலே உன்னையேதான் நிந்தித்துக்கொண்டனை.

ஆடம்:—[முன்னால்வந்து] ஐயன்மீர் க்ஷமித்துக் கொள்ளுங்கள், க்ஷமித்துக் கொள்ளுங்கள். உங்கள் பிதாவின் நிமித்தம் ஐக்கியமாக இருங்கள்.

ஆலி:—விடு, நான் போகட்டும்.

ஆர்லா:—மாட்டேன், என்மனம் குளிரும்வரை விடவேமாட்டேன். முதலாவது நான் சொல்லுகிறதைக் கேள். என்னை நன்றாக வளர்க்குமாறு என்பிதா தமது மரணசாசனத்தில் கட்டளை யிட்டிருக்கின்றாரல்லவா? அப்படியிருக்க, நீ குலமகனுக்குரிய ஆசாராதிகளை யெல்லாம் என் கண்ணிலும் காட்டாது மறைத்துவிட்டு என்னை ஒரு காட்டானைப் போல வளர்த்திருக்கின்றாய். என் பிதாவின் சுவாபம் என்னில் அங்குரித்தோங்கி வருகின்றது. இனி ஒருகணமும் பொறுக்கமுடியாது; குலமகனுக் கேற்ற அப்பியாசங்களைப் பயில இடங்கொடு, இல்லாவிட்டால் எனக்கென்று என் பிதா வைத்துச் சென்ற சொற்ப பிதிரார்ஜித சொத்தை எனக்குக் கொடுத்துவிடு; அதைக்கொண்டு நான் எனது பாக்கியத்தைத் தேடிக் கொள்ளுகின்றேன்.

ஆலி:—அது செலவழிந்தபின் என்ன செய்வாய்? வீடுவீடாய்ச் சென்று இரப்பாயா? நல்லது ஐய உள்ளேவா; உன்னுடைய உபத்திரவம் இனி ஒரு நிமிஷமும் வேண்டாம். உன்னுடைய பிதிரார்ஜித சொத்தில் ஒரு பாகத்தைப் பெற்றுக்கொள். இனி என் வீட்டில் இராதே, தயவுசெய்து இந்தக்ஷணமே போய்விடு.

ஆர்லா.—என்காரியம் தீர்ந்தால் அப்புறம் நான் ஏன் உனக்குபத்திரவம் கொடுக்கிறேன். இந்த க்ஷணத்திலேயே போய்விடுகிறேன்.

ஆலி:—[ஆடமை நோக்கி] நீயும் அவனுடன் ஓடிப்போ கிழட்டுநாயே.

ஆடம்:—கிழட்டுநா யென்பது தான் எனக்குச் சன்மானம்! வாஸ்தவந்தான், பால்யம் முதற்கொண்டு பல்லும்போய்க் கிழவனாகும் வரை உங்கள் ஊழியத்திலேயே இருந்திருக்கிறேன்; என்னுடைய பழய எஜமானை ஈசுவரன் ரக்ஷிக்கட்டும்! அவர் இப்படி ஒரு வார்த்தையும் கூடப் பேசியதில்லை.

[ஆர்லாண்டோவும் ஆடமும் போகின்றார்கள்].

ஆலி:—இப்படியா சமாசாரம்? என்மீது இவ்வளவுக்கு வந்து விட்டாயா நீ? உன் ஆயிரம் கிரவுனை நான் உனக்குக் கொடுக்கப்போவதில்லை. உன் கொழுப்பையும் அடக்கிவிடுகிறேன் பார்: யார் அங்கே ஓ, டென்னிஸ்

[டென்னிஸ் பிரவேசம்].

டென்:—சமுகத்தில் அழைத்ததோ?

ஆலி.—கோமகனின் வஸ்தாதாகிய சார்ளஸ் என்னுடன் பேச வந்திருக்கின்ருனு?

டென்:—இதோ கதவண்டை நிற்கிருன்; தங்களுடன் பேசவேண்டுமென்று ஆத்திரப்படுகிருன்.

ஆலி.—அவனை உள்ளேவரச்சொல் [டென்னிஸ் செல்கின்ருன்] இது நல்ல வழிதான்; நாளைக்குத்தான் குஸ்தி.

ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை.

SARASWATI.

சரஸ்வதி.

6-வது அதிகாரம்.

பாரிஸ் நகரம்.

நாம் இன்னுமொருமுறை பாரிஸ் நகரை யடைய வேண்டி யிருக்கிறது. ஆனல் இந்தத் தடவை மனோவாகனத்தை எதிர்ப்பார்க்க வேண்டிய அவசியமில்லை. புகைவண்டியும் புகைக்கப்பலும் நம்மைச் சீக்கிரத்தில் அவ்விடம் சேர்ப்பிக்கும்.

மேலத்தியாயத்தில் கண்ட விஷயங்கள் நடந்தேறிய மறுநாள் பாரிஸ் பட்டணத்தின் கீழ்ப்பாரிசத்தில் நிலையாகக் கட்டப்பட்டிருந்த கொட்டாரத்தில் ஐரோப்பிய நாடகமொன்று நடந்துகொண்டிருந்தது. அவ்விடம் விநோத காலட்சேபம் செய்யச் சேர்ந்திருந்த அனேகரில், மகமதியப் பிரபுவொருவர் தனியாகச் சென்றிருந்தார். அவர்மனம் வேறிடத்திற் பிரவர்த்தித்திருந்தபடியால் அவர் இந்திரியங்கள் நாடக விசேஷங்களை யறியா தொழிந்தன. அவரை ஒரு நாழிகை பரியந்தம் கூர்மையாய் அடுத்த பாக்சிலிருந்து பர்த்திருந்த ஐரோப்யஸ்திரீ ஒருவள் சடுதியில் அவர் ஆசனத்தை நெருங்கி "மிஸ்டர் கல்வியாணசுந்தரம்!" என்ருள். மகம்மதிய வேஷம் தாங்கியவர் திடுக்கிட்டு அவளைப்பார்த்து "நீயார்? என்னிடம் வந்த காரணம் யாதோ?" வென்ருர்.

பிரென்சுமாது "நீர் என்னுடன் போகும்படி கோறுகிறேன். உமக்குக் குற்றமொன்றும் நிகழாதென்று உறுதியாய்க்கூறுகிறேன்" என்றனள். "ஆயினும் நான் போகவேண்டி யிருக்கும் இடந்தான் யாதோ? அதைத் தெரிவித்தால் குற்றமென்ன" என்ருர் இந்தியர். ஐரோப்பிய லேடி இவர் சந்தேகத்

தைப் பொருதவளாகி "சேவலம் ஒரு பெண்பிள்ளை பின்செல்ல அஞ்சும் நீர் மிகுந்த வீரத்தன்மை யடைந்தவராயிருக்கவேண்டும்!" என்று நகைத்துக்கூறி ஞள். அது இவர்க்குப் புண்ணில் வேல்பட்டதுபோ லிருந்ததால் ஆசனத்தை விட்டெழுந்து அவள் முன் செல்லத்தான் பின்சென்று கொட்டாரத்தை யடுத்து நின்ற அழகிய வண்டி ஒன்றி லேறி அரைநாழிகைப் போதில் மூன்றடுக்கு மாளிகை யொன்றி னெதிரி லிறங்கி, உடன்சென்ற ஸ்திரீ முன்சென்று வழி காட்ட அக் கட்டிடத்தின் மேன்மாடியை யடைந்து, அரசர்களும் வியக்கத்தக்க அலங்கார மமைந்திருந்த சித்திரக்கூட மொன்றினுட் பிரவேசித்தார். முன்சென்ற இளங்கன்னிகை உரு வெளித்தோற்றம்போல் விளக்கொளியில் கரந்து மறைந்தாள். உடனே இந்திரஜாலக் காட்சியேபோல் இவர் அங்குவந்த மார்க்கமே அடைபட்டுப்போய் சுற்றிலும் நிலக்கண்ணுடி மயமாய் விளங்கிற்று அக்கூடம். சுற்றிச் சுற்றிப் பார்த்தார் நம்மிளம் பிரபு. சுற்றிலும் தன் பிரதிபிம்பமே கண்டார்; வேறொன்றும் காணுர். சற்றுநேரம் பிரம்மையடைந்து நின்றுர். பிரமை யொழிந்து, மதிமோசம் போனேனென்று கருதி அந்தக் கூடத்தைவிட்டு வெளியே செல்ல பகீரதப் பிரயத்தினம் செய்தார். எல்லாம் அப்பிரயோசனமாய் முடிந்தன. "ஈசா, இதுவும் உன் திருவிளையாட்டோ!" வென்று பெரிமூச்செறிந்தார். பின்னும் ஒருமுறை கூடத்தைச் சுற்றி வலம்வந்தார். முன்னும் பின்னும் அறியார். இது நனவோ கனவோ என்று மயங்கினுர், விரலைக்கடித்தார். நனவே என்றுர். ஒன்றுந் தோன்ருது முடிவில் அங்கு அழகிய வரிசைகளாக அமைக்கப்பட்டிருந்த சோபா வொன்றிலிருந்து இது நனவிற் கனவே என்று சித்தாந்தம் செய்தார். உடனே அந்த சோபாவை யடுத்த பங்காவொன்று தற்செயலாய் அசைந்தாட ஆரம்பித்தது. இருந்தவிடம் தெரியாது வெளிவந்த இரண்டு சூத்திரப் பெண்பதுமைகள் இளம்பிரபுவிற்கு சாமரம் வீசின. அந்தரத்தினின்று சுகந்தபரிமளம் வீசிய புஷ்பங்கள் அகஸ்மாத்தாய்ப் பலபல வென்று இவர் மீது வருஷித்தன. எதிர் தோன்றிய நிலக்கண்ணுடிகள் வெகுதூரமாய் நகர்ந்து போயினதை யொத்த ஓர் காட்சி இவர் நேத்திரேந்திரியத்திற்கு விஷயமாகி இடையில் திவ்ய பூங்காவனம் ஒன்று ஹாஸ்ச்சரியமாய் தோன்றிற்று. அதனிடம் கானம் செய்த நானுவித அரும்பட்சிகள் இவரைச் சுற்றிப்பறந்து இவரை முழுதும் மயக்கின. இதுவும் போகாது, பூரணசந்திரோதய அரும் காட்சியும் இவ்வனத்தி லெழுந்தது. திராவிட தேசத்து கோடைக்காலத்து மெல்லிய இளந்தென்றல் ஒருபுறம் மெல்லென அடித்தது; ஐப்பசிமழைபோல் பனிநீர் இவர் தேகத்தை நனைத்தது. சுந்தரம் மெய்ம்மறந்தார்; உடனே காந்தருவ கானம்போல் வீணைவாத்தியம் ஒருபுறம் இவர் மனதை முற்றும் கரைத்தது. மேலும் கீழும் முன்னும் பின்னும் பார்த்தார் கலியாணம். கானம் பிறந்தவிடம் இன்னதென்று காணுர். கானமாயினுர். உடனே மனது முழுமையும் கவரத்தக்க அமிர்த குரலுடன் பாடிய அரம்பையை யொத்த வீணையை

யேந்திய கன்னிகை அதி ரூபலாவண்ணிய மடைந்தவள் முனீஸ்வரர்களையும் நொடியில் மயக்கத்தக்க பொன்மேனியை முற்றும் பிரகாசப்படுத்திய நீலவர்ணமஸ்லின் உடையுடன் சுவர்க்கத்தினின்றும் சொர்ன விமானத்திலிறங்கிய தேவதா ஸ்திரீபோல் நம்பன் முன் பிரசன்னமாயினுள். நம்மிளம் பிரபு ஒன்றும் சிந்திப்பதற்கே அவகாசமில்லா தொழிந்தது. இப்பால் வனக்காட்சி மறைந்து, கூடக் காட்சியே நிகழ்ந்தது.

கலியாணசுந்தரம்:—புஷ்பம்! என் விரதத்தை பங்கம் செய்தையே! இது அழகோ?

பு—.விரதம் மோகனங்கியின் கலியாணம் நடந்த அன்றே பங்கப்பட்டதே.

க—,நான் கலியாணம் செய்து கொள்வதில்லை யென்று பீஷ்மம் செய்து கொண்டதை யறிந்த பந்துக்கள் நிந்தியாரோ-பெண்ணே!

பு.— கலியாணத்திற்கும் கலியாணமோ? ஆயினும் யான் பொதுமாதுதானே! (முகங்கறுத்து வாடினுள்) என்னை யணைந்ததால் விரதபங்கமாவானேன்?

க.—பெண்ணே! என்ன கர்ண கடூரமான வார்த்தைகளை மொழிந்தனை? இன்று தொட்டு நீ என் பத்தினியானது உண்மையன்றோ? பழமையை யனுசரித்தே நான் உன்னைக் காந்தர்வமாய்க் கூடினேன்; நீயோ சேற்றில் பூத்த செந்தாமரையாகும். உன் நற்குணங்களை நான் முற்றுமறிவேன். என்னுறவினர் தயவையும் நட்பையும் யான் எதிர்பார்த்தவனல்லேன். உன் உள்ளன்பே என்னுயிரைப் போஷிக்கும் ஆகாரமாகும்.

பு.—அன்ப! ஐய! புண்ணிய! நுங்கூற்று எனக்கு சுவர்க்கத்தைத் தந்தது. புருஷ சிங்கமே! ஏழைக்கு மெய்வாழ்வளித்த குணமுகிலே! என்று மொழிந்து கரைந்து கண்மலரூகிர்த்தனள்.

க.—புஷ்பாவதி! உன் செவிலித்தாயாகும் மனோன்மணியின் கற்பனு போதனைக்குத் தப்பி எவ்வாறு கற்பை வளர்த்து மேன்மையுற்றாய் கண்மணி?

பு.—நாதா! என் பூர்வ கர்மமும் தெய்வ சகாயமும் ஒத்திருந்து என்னை ரட்சித்தன. என் வாழ்வே!

க.—உண்மை, உண்மை-நான் குழந்தைப் பருவமுதல் உன்னை யறிந்துள்ளேன். எக்காலத்தும் நீ தாசித் தனத்துக்குரிய நடை பயின்றதை நானறியேன் மின்னே. அக்காலத்தேயே என்னை நீ துணைவனுகக் கோரியதும் யானறிந்தவனல்ல. என்விஷயமாய் நீ பர்மாதேசம் சென்று, என் பெரிய தமையனை யான் கொன்றேனென்னும் கொடிய வதந்தியை மாற்ற மிகுந்த பிரயாசைப்பட்டு, அண்ணன் முதல்தாரத்தை பின்தொடர்ந்து சென்னையடைந்து, இவரறியாது திருவள்ளூரில் அவள் வீட்டை யடுத்த கிருஹத்தை வாடகைக்குப்பெற்று அவள் மரண தசையளவும் அங்

இருந்து, என குற்றமின்மையை ஸ்தாபிக்க அனுகூலமான சாதனங்களையும் ஏராளமாய்ப் பொருட்செலவு செய்து சேகரித்து உலகத்தார்க்கு நான் நிரபராதியென்று ரூபித்து என் உயிரையும் மானத்தையும் காத்த விஷயம் என் உயிர்த்தோழனால் கேள்வியுற்றேன். அவ்வளவும் போதாது. இவ்வளவு சிரமடைந்து என்னைத் தேடிப் பிடிக்க இந்த தூரதேசம் நீ வந்தது என்ன அருமை! மானே! நான் நன்றியறியா தொழிந்தால் தெய்வந்தான் பொறுக்குமோ? நாயகி என்னுருயிரை உனக்குப் பிந்தியாகத் தருகின்றேன்; என் வாழ்நாளும் உன் வாழ்வை வேண்டியே எனக்கு வாழ்நாளாகும் முத்தே.

பு.—பாரீனில் மோகனாங்கி சித்தப்பிரமையடைந்து அகால மரண மடைந்த வரலாற்றை தெரிவிப்பீர் சுந்தரா.

க.—மோகனாங்கி சென்னையில் வாசித்துக்கொண் டிருந்தபோது நான் அவள் நெருங்கிய பந்து வாகையால் அடிக்கடி கண்டு சாம்பாஷிக்க சந்தர்ப்பங்கள் நேர்ந்தன. நாளடைவில் எங்கள் நட்பு வளர்ந்து வந்து முடிவிலொருநாள் ஒருவரை யொருவர் மணந்து கலப்பதாய் வாக்குதத்தம் செய்துக்கொண்டோம். அவள் தந்தையைப் பார்க்க பர்மா போகும்படி நேரிட்டது. பர்மாவில் மோகாம்பர முதலியார் அவளைப்பார்த்து மோகித்து அவள் பந்துக்களைக்கொண்டு வற்புறுத்தி அவ ளெண்ணங்கட்கு முற்றும் மாறாக அவளை இரண்டாந்தரம் வதுவை செய்துக்கொண்டு அவளிடம் அத்தியந்த விசுவாசம் வைத்து நடந்து வந்தவர் முதல் தாரத்தைச் சிறுமாறாக நடத்திவந்தார். அவள் இளையவளைச் சரிப்படுத்திவிடும்படி வேலையா ளொருவனுக்குப் போதித்து அவனைக் கைவசப்படுத்தினாள். அவனோ இவளபிப்பிராயத்தைச் சரியாய்க் கவனியாது, எஜமானை எமலோகம் சேர்ப்பிக்க சமயம் பார்த்துக் கிடந்தான். இரண்டொரு மாதம் சென்று நான் தமக்கையைக் காண ரங்கோன் சென்றேன். அவர்கள் அண்ணன்வீட்டிற்குப் போயிருந்ததை அத்தானாலறிந்து பாரீன் சென்றேன். எங்கள் தோட்டத்தை நான் நெருங்கியபோதே பல துர்ச்சகுணங்கள் நிகழ்ந்தன, துக்கமனதுடன் கேட்டைத்திறந்து உள் நுழைந்தேன். அருகே உலாவிக்கொண்டிருந்த மோகனாங்கி என்னைக்கண்ட வுடனே கதறிக்கொண் டோடிவந்து என்மேல் வீழ்ந்து பொருமினாள். நான் மரம்போல் நின்றேன்; அவளென்னை யிறுகத்தழுவி மார்புற வணைத்து முத்தமிட்டாள். நானும் என்னை மறந்து அவளை முகத்தோ டணைத்து இன்புறத் தழுவிநின்றேன். அசந்தர்ப்பமாய் அவ்விடம் திடீரெனத் தோன்றி எங்கள் கோலத்தைக் கண்ட மோகாம்பர முதலியார், சிம்ஹ சொரூபமாகிக் காய்ந்து, அவர் வாகிங் ஸ்டிக்கிலிருந்த வாளைத்தூக்கி என் சிரத்தைக் கண்டிப்பான் வீசினார். தெய்வச்செயலாய் அவ் வாயுதம் என்னைத் தீண்டாது புறத்திற் பாய்ந்து தப்

பினேன். இதைக் கண்ணுற்ற மோகனுங்கி வெருண்டு சித்தம் கலங்கிப் பேய்க்கூச்சலிட்டுக்கொண்டு தோட்டத்தை விட்டுக் காற்ருயோடினுள். நான் சிலநேரம் மனமகிழ்ந்துநின்று, பின்பு மனமடைந்து கலைடைந்து அவளைத்தொடர்ந்து ஓடினேன். தோட்டத்திற் கிரண்டுகல் தூரத்தில் அவள் உயிரை விட்டதை யறிந்து நானும் பித்தனைப்போல் காட்டுமார்க் கமாய் விழுந்து ஓடி சிலநாள் சில கிராமங்களில் வசித்து ஒன்பதாம் நாள் இரங்கோனைச் சேர்ந்தேன். சேர்ந்த க்ஷிமிஷமே என்னுயிர்த் தோழ ஞெருவன் என்னைக் கண்டு நடந்த விஷயங்களைத் தெரிவித்து யாவர்க்கும் அண்ணன் துர்மரண விஷயமாய் என்மீது தீராச் சந்தேக மிருந்ததென்று தெரிவித்து அற்றை யிரவே சீமைக்குப் புறப்பட்ட கப் பலில் ஏற்றப்போயினேன். நானும் இத்தேசமடைந்து மகம்மதிய உடையுடன் இது காறும் இங்கே சஞ்சரித்து வந்தேன். என் சினேகன் அடிக்கடி எழுதும் கடிதங்களால் அவண் நிகழ்ந்த வர்த்தமானங்களெல் லாம் தெரிந்துகொண்டேன்" என்ருர்.

பு.—அன்ப இனி நந்தேசம் திரும்பிச்செல்லத் தடையென்ன?

க.—தடையென்ன? இக்ஷிமிஷமே செல்வோம். மஹேந்திரஜாலம் கற்ற றிந்த நீ மாயாகப்பலொன்று சிருஷ்டிக்க வல்லையல்லையோ? மூன்றுவார த்திய பிரயாணத்தை 3-நாழிகையில் நாம்முடிக்கப்போகாதோ? நல்லது பெண்ணே! இந்த அரிய வித்தையை எவ்விடம் அறிந்தாய்?

பு.—வித்தையின் விசேஷம் என்னைச்சேர்ந்ததல்ல;ஐரோப்பிய சாஸ்திர விரி த்திகளின் காரியமே இவ்வித்தை. சென்றவருடத்தில் நூதனமாய்க்கண்டு பிடிக்கப்பட்டஒருவிதபூதக்கண்ணுடியால்இந்தக்கண்மயக்கம் நிகழ்ந்தது. வாரும் இதை உமக்குப் பூர்ணமாய் போதிக்கிறேன்" என்றுகூறி, கூடத் தையடுத்து இருந்த அறையொன்றைக் கண்ணுடிக்கதவை ஸ்பிரிங்கினுல் திறந்து பூமானுடன் ப்ரவேசித்தாள் புஷ்பாவதி.

7-வது அதிசாரம்.

லண்டன் பிரின்ஸ் ஆல்பர்ட் வீதி.

ஜான்சன் துரையவர்களின் நூதனகிருஹம் மேற்படி வீதியின் 120-ம் நம்பரைப் பெற்றிருந்தது. துரையும் துரைசானியும் சரஸ்வதிக்கு வெகுமதி யாகக் கொடுக்கும்படி சில சாமான்களை ஷாப்பிங் சென்றிருந்தனர். ஊழியர் கள் சரஸ்வதியின் சாமான்களை கப்பலேற்றுவதற்குத் தயார்செய்துக்கொண் டிருந்தனர். சரஸ்வதியும் பாஸ்கரமும் பிரேக்பாஸ்ட் உண்டு டிராயிங்ரூமில் சந்தித்தவர் ஆசைமொழிகளாற் கொஞ்சிக்குலாவுவராயினர்.

இருந்து, என குற்றமின்மையை ஸ்தாபிக்க அனுகூலமான சாதனங்களையும் ஏராளமாய்ப் பொருட்செலவு செய்து சேகரித்து உலகத்தார்க்கு நான் நிரபராதியென்று ரூபித்து என் உயிரையும் மானத்தையும் காத்த விஷயம் என் உயிர்த்தோழனால் கேள்வியுற்றேன். அவ்வளவும் போதாது. இவ்வளவு சிரமடைந்து என்னைத் தேடிப் பிடிக்க இந்த தூரதேசம் நீ வந்தது என்ன அருமை! மானே! நான் நன்றியறியா தொழிந்தால் தெய்வந்தான் பொறுக்குமோ? நாயகி என்னுருயிரை உனக்குப் பிந்தியாகத் தருகின்றேன்; என் வாழ்நாளும் உன் வாழ்வை வேண்டியே எனக்கு வாழ்நாளாகும் முத்தே.

பு.—பாரீஸில் மோகனாங்கி சித்தப்பிரமையடைந்து அகால மரண மடைந்த வரலாற்றை தெரிவிப்பீர் சுந்தரா.

சு.—மோகனாங்கி சென்னையில் வாசித்துக்கொண் டிருந்தபோது நான் அவள் நெருங்கிய பந்து வாகையால் அடிக்கடி கண்டு சாம்பாஷிக்க சந்தர்ப்பங்கள் நேர்ந்தன. நாளடைவில் எங்கள் நட்பு வளர்ந்து வந்து முடிவிலொருநாள் ஒருவரை யொருவர் மணந்து கலப்பதாய் வாக்குதத்தம் செய்துக்கொண்டோம். அவள் தந்தையைப் பார்க்க பர்மா போகும்படி நேரிட்டது. பர்மாவில் மோகாம்பர முதலியார் அவளைப்பார்த்து மோகித்து அவள் பந்துக்களைக்கொண்டு வற்புறுத்தி அவ ளெண்ணங்கட்கு முற்றும் மாறாக அவளை இரண்டாந்தரம் வதுவை செய்துக்கொண்டு அவளிடம் அத்தியந்த விசுவாசம் வைத்து நடந்து வந்தவர் முதல் தாரத்தைச் சிறுமாறாக நடத்திவந்தார். அவள் இளையவளைச் சரிப்படுத்தி விடும்படி வேலையா ளொருவனுக்குப் போதித்து அவனைக் கைவசப்படுத்தினாள். அவனோ இவளபிப்பிராயத்தைச் சரியாய்க் கவனியாது, எஜமானை எமலோகம் சேர்ப்பிக்க சமயம் பார்த்துக் கிடந்தான். இரண்டொரு மாதம் சென்று நான் தமக்கையைக் காண ரங்கோன் சென்றேன். அவர்கள் அண்ணன்வீட்டிற்குப் போயிருந்ததை அத்தாலறிந்து பாரீஸ் சென்றேன். எங்கள் தோட்டத்தை நான் நெருங்கியபோதே பல துர்ச்சகுணங்கள் நிகழ்ந்தன, துக்கமனதுடன் கேட்டைத்திறந்து உள்நுழைந்தேன். அருகே உலாவிக்கொண்டிருந்த மோகனாங்கி என்னைக்கண்ட வுடனே கதறிக்கொண் டோடிவந்து என்மேல் வீழ்ந்து பொருமினாள். நான் மரம்போல் நின்றேன்; அவளென்னை யிறுகத்தழுவி மார்புற வணைத்து முத்தமிட்டாள். நானும் என்னை மறந்து அவளை முகத்தோ டணைத்து இன்புறத் தழுவினின்றேன். அசந்தர்ப்பமாய் அவ்விடம் திடீரெனத் தோன்றி எங்கள் கோலத்தைக் கண்ட மோகாம்பர முதலியார், சிம்ஹ சொரூபமாகிக் காய்ந்து, அவர் வாகிங் ஸ்டிக்கிலிருந்த வாளைத்தூக்கி என் சிரத்தைக் கண்டிப்பான் வீசினார். தெய்வச்செயலாய் அவ் வாயுதம் என்னைத் தீண்டாது புறத்திற் பாய்ந்து தப்

பினேன். இதைக் கண்ணுற்ற மோகனாங்கி வெருண்டு சித்தம் கலங்கிப் பேய்க்கூச்சலிட்டுக்கொண்டு தோட்டத்தை விட்டுக் காற்றாயோடினாள். நான் சிலநேரம் மனமகிழ்ந்துநின்று, பின்பு மனமடைந்து கவலைடைந்து அவளைத்தொடர்ந்து ஓடினேன். தோட்டத்திற் கிரண்டுகல் தூரத்தில் அவள் உயிரை விட்டதை யறிந்து நானும் பித்தனைப்போல் காட்டுமார்க்கமாய் விழுந்து ஓடி சிலநாள் சில கிராமங்களில் வசித்து ஒன்பதாம் நாள் இரங்கோனைச் சேர்ந்தேன். சேர்ந்த க்ஷிமிஷமே என்னுயிர்த் தோழனொருவன் என்னைக் கண்டு நடந்த விஷயங்களைத் தெரிவித்து யாவர்க்கும் அண்ணன் துர்மரண விஷயமாய் என்மீது தீராச் சந்தேகமிருந்ததென்று தெரிவித்து அற்றை யிரவே சீமைக்குப் புறப்பட்ட கப்பலில் ஏற்றப்போயினேன். நானும் இத்தேசமடைந்து மகம்மதிய உடையுடன் இது காறும் இங்கே சஞ்சரித்து வந்தேன். என் சிநேகன் அடிக்கடி எழுதும் கடிதங்களால் அவண் நிகழ்ந்த வர்த்தமானங்களெல்லாம் தெரிந்துகொண்டேன்" என்றார்.

பு.—அன்ப இனி நந்தேசம் திரும்பிச்செல்லத் தடையென்ன?

க.—தடையென்ன? இக்ஷிமிஷமே செல்வோம். மஹேந்திரஜாலம் கற்றறிந்த நீ மாயாகப்பலொன்று சிருஷ்டிக்க வல்லையல்லையோ? மூன்றுவாரத்திய பிரயாணத்தை 3-நாழிகையில் நாம்முடிக்கப்போகாதோ? நல்லது பெண்ணே! இந்த அரிய வித்தையை எவ்விடம் அறிந்தாய்?

பு.—வித்தையின் விசேஷம் என்னைச்சேர்ந்ததல்ல;ஐரோப்பிய சாஸ்திர விற்பத்திகளின் காரியமே இவ்வித்தை. சென்றவருடத்தில் நூதனமாய்க்கண்டு பிடிக்கப்பட்டஒருவிதபூதக்கண்ணாடியால்இந்தக்கண்மயக்கம் நிகழ்ந்தது. வாரும் இதை உமக்குப் பூர்ணமாய் போதிக்கிறேன்" என்றுகூறி, கூடத்தையடுத்து இருந்த அறையொன்றைக் கண்ணாடிக்கதவை ஸ்பிரிங்கினால் திறந்து பூமானுடன் ப்ரவேசித்தாள் புஷ்பாவதி.

---

7 - வது அதிகாரம்.

லண்டன் பிரின்ஸ் ஆல்பர்ட் வீதி.

ஜான்சன் துரையவர்களின் நூதனகிருஹம் மேற்படி வீதியின் 120-ம் நம்பரைப் பெற்றிருந்தது. துரையும் துரைசானியும் சரஸ்வதிக்கு வெகுமதியாகக் கொடுக்கும்படி சில சாமான்களை ஷாப்பிங் சென்றிருந்தனர். ஊழியர்கள் சரஸ்வதியின் சாமான்களை கப்பலேற்றுவதற்குத் தயார்செய்துக்கொண்டிருந்தனர். சரஸ்வதியும் பாஸ்கரமும் பிரேக்பாஸ்ட் உண்டு டிராயிங்ரூமில் சந்தித்தவர் ஆசைமொழிகளாற் கொஞ்சிக்குலாவுவராயினர்.

ச.—ஐயா, லாயரே! உங்கள் சமுகத்தில் நான்பேசும் தமிழ் தமிழ்தானே ?

பா.—ஹோ! ஹோ! என்ன அம்மா வயித்திய சாஸ்திரப் பண்டிதையானது போதாது. இரண்டொரு மாதத்தில் செந்தமிழ்ப் பண்டிதையாகியும் வீட்டீர்களோ ?

ச.—ஆம். ஆம். என்றமிழ்ப்புலமைக்கு நீங்கள் நற்சாட்சிப்பத்திரம் அளித்து விட்டீர்களே, இனி என்னகுறை !

பா.—சரஸ்வதி தேவிக்கும் சர்டிபிகேட்டொன்று வேண்டுமோ ?

ச.—சுகபிர்ம ரிஷியும் ஓர்காலத்தில் சூர்பனிடம் சென்று வாசித்தாரென்று புராணம் கூறும்

பா.—என்னுசைக் கண்ணுட்டி ! உன்னுணர்வை எப்படி என் சிற்றறிவால் சிலாகிப்பேனடி ?

ச.—எது, எது, அடிபுடி என்ன ஆரம்பித்து விட்டீர். உனக்குநல்ல அகமுடையாள் கூடிவிட்டாள். வேண்டாமையா உமதுறவே எனக்குவேண்டாம் ; என்கன்னிகை கழியாதிருத்தலே மேலப்பா! தூர இரும் ஐயா ; மரியாதை தப்பி வம்பும் தும்பும் பேசுகிறீரென்று ஊடலால் மொழிந்தாள்.

பா —உன்னையன்றி நானு’கண்மணி ?

ச.—நான்தானே நீரும் ?

பா.—சந்தேகமென்ன ?

ச.—இது சத்தியமா ?

பா.—யஸ் மை டியர்.

ச.—ஆனல், சங்கரபாஷ்யமே சத்தியம்போலும்.

பா.—அது லோகப்பிரசித்தி யாயிற்றே.

ச.—ஐயா பிர்மக்கலியாணியே-நீரோ பாரமார்த்திக தசையையடைந்த திவ்ய மூர்த்தம். உம்மைக்கட்டிக்கொண்டு நான் என்னசெய்யப் போகிறேன் ஓய்.

பா.—என்ன அம்மா நீரென்ன என் மைத்துனரா ?

ச.—மைத்துனி முறைகொண்டாடுவதாயிருக்கட்டுமே ?

பா.—நல்லது தாயே-உமதிஷ்டம் போல் ஏழையை என்றும் கை சோரவிட வேண்டாம் அம்மணி.

ச.—இதென்ன அநியாயம்- என்னை அம்மா தாயே என்றழைக்கிறீர்களே உங்களுக்கு நாணமில்லையோ ?

பா.—காமுகர் பாஷைக்குக் குற்றம் கூறுவதுண்டடி, என் பொன்மணி !

இந்தசமயத்தில் ஊழியனொருவன் வெள்ளித்தட்டில் கார்ட் ஒன்றைக் கொண்டு வந்து விசிட்டுக்கு இந்தியபிரபு ஒருவர் வந்துள்ளார் என்று தெரிவித்தான். பாஸ்கரம் விசிட்டிங் கார்ட்டை பார்த்த மாத்திரத்தில் பீரென்றுச

னத்தை விட்டெழுந்து கார்ட்டை சரஸ்வதியிடம் கொடுத்து அவரும் அவ லுடன் பின் தொடர்ந்து செல்லப் புறப்போந்து கலியாணசுந்தரமுதலியாரை வந்தன வழிபாடுகள் செய்து தழுவிச் சந்தோஷித்து உள்ளே அழைத்துச் சென்று திவ்யாசனம் காண்பித் திருக்கச்செய்து, சரஸ்வதியை அவர்க்கு உபசார முறைமையால் இன்டிரடியூஸ் செய்து அவரைக் களிப்பித்து க்ஷேம லாப விசாரணை செய்வாராயினர்.

பா.—மாமா! நீர் அன்று எனக்குயிர்பிட்சை கொடுக்கும்படி அவ்விடம் வந் தொத்துக்கொண்டது எப்படியோ தெரிவிப்பீர்?

கலி.—புஷ்பாவதி பாரீசிக்கு என்னை வேண்டி வந்துள்ளாளென்று இந்தி யாவினின்று கிடைத்த கடிதங்களால் அறிந்து அவளைத்தேட ஆரம்பித் து பாரீசையடுத்த கிராமமொன்றுக்குப் போயிருந்து பாபிகள் உன்னு யிரைக் கவர எத்தனித்த அந்த சமயம் தற்செயலாய் அவ்விடம் நான் வர நேரிட்டது. எல்லாம் திருவருட்செயலேயன்றி வேறொன்றல்ல. பிரேரேபணையன்றி யாதொன்றும் நிகழுமோ; இரண்டு வாரம் பிற்பட்டு நீங்கள் பாக்ஸ் கமிஷனரிடம் எழுதிவைத்த வாக்குமூலத்தில் என்னைக்கு றித்துப் பேசியிருந்த விஷயத்தை நான் பேபர்களால் தெரிந்துகொண்டு அடுத்த நாள் என் வாக்குமூலமும அவரிடம் சென்று கொலைஞர் இற ந்த விஷயத்தைக்குறித்து எழுதிவைத்தேன். கமிஷனரவர்கள் என்னை அபரிமிதமாய்க் கொண்டாடியது எனக்கு வெறுப்பையே தந்தது.

பா.—நாங்கள் நாளைய கப்பலில் சுதேசம் புறப்படச் சித்தமாயிருக்கிறோம். தாங்கள் எப்போது வருகிறீர்கள்?

க.—நான் ஞானத்தைக் கூட்டிக்கொண்டு ஒரு முறை அமெரிக்காவைப் பார் த்து விட்டு, இரண்டொரு மாதத்தில் அவ்விடம் வருவேனப்பா.

ச.—புஷ்பாவதியை யேன் அழைத்து வரவில்லையண்ணு?

க.—புஷ்பாவதியை யான் விவாகம் செய்தபிற்பாடு நீ காண்பாயம்மா. உன் னைப் பந்துவாக நாங்கள் பெற என்ன தவம் செய்தோமோ அம்மணி.

V. முத்துக்குமாரசுவாமி.

LADIES' PAGES.
மாதர்க்கிதமான பக்கங்கள்.

HOWA BASHFUL LOVER PROPOSED.
ஒரு கூச்சமுள்ள காதலன் தன் மனதை வெளியிட்ட விதம்.

நான் வீணையை வாசித்துக்கொண் டிருக்கும்பொழுது என்து சகோதரர் பாட்டில் பயிற்சியுள்ள மிஸ்டர் போவலென்பவருடன் வந்தார். உள்ளேவந்த வுடனவர் மிஸ்டர் போவலென்பவர் மிக்க கூச்சமுள்ளவரென்றும் ஆனல் பா

ட்டுப் பாடுவாரென்றும் சொன்னார். அன்று முழுவது மிருந்துவிட்டு நேரமா டன் அவர் திரும்பிப் போய்விட்டார். ஆயினும் அவர் பிரதிதினமும் வர வாரம்பித்தார். இம்மாதிரி யொரு வருஷமாகியுமவர் அதிக கூச்சமுள்ளவ ராகவே யிருந்தார். குனிந்த தலையை நிமிர்த்தமாட்டார். அவரதுதலைநோகு மென்று நான்வருத்தப்படுவேன். இவ்விதமிருக்கும்பொழுது ஒருநாள் எனது சகோதரராகிய மிஸ்டர் டாம், "உன் புருஷன் எவ்விதமிருக்கிறார்" என்றார். "சீ! என்ன வார்த்தை சொல்லுகிறீர்" என்றேன். அதற்கு அவர் தான் தப் பாக வொன்றும் சொல்லவில்லையென்றும் தான்சொல்லுவதற்கெல்லாம் தகு ந்த ஆதாரமிருக்கின்றதென்றும் சொல்லி ஒருகிழிந்த கடிதத்துண்டை நீட்டி னார். அது கசங்கியிருந்தது. அதைவாங்கி யொற்றுப்பார்க்கையில் 'கொடி யவலையி லகப்பட்டுத்தவிக்கும் ஒருபரிதாப நிலைமையிலுள்ள முயலைப்போல் உன்னால் என்மனம் கவரப்பட்டிருக்கின்றது" என வரையப்பட்டிருந்தது. இதிலடங்கியுள்ள கருத்து எனக்கு விளங்கிற்று. எனது சகோதரரானவர், இதை என்னிடத்தில் நேராகச்சொல்லும்படி யவ்வளவுதைரியம்அவருக்கொரு போது முண்டாகாதென்றும் ஆகையால் நான் அவருக்குஉதவிசெய்யவேண்டு மென்றும் சொன்னார். மறுதடவை யவரென்னிடம் வந்திருந்தபொழுது நான் சற்று இரகசியமாக அவரை நன்றாய்க் கவனித்தேன். என் சகோதிரர் சொன்னது வாஸ்தவமாகவே யிருந்தது. அவரைக் கொஞ்சமேனும் லக்ஷியம் செய்யாவிடினும் அவருடைய நிலைமை யெனக்கு வருத்தத்தை யுண்டுபண்ணி ற்று. இவ்விதம் கொஞ்சநாள் சென்றபிறகு ஒருநாள் எனக்கு ஒருபார்சலும் ஒருகடிதமும்வந்தன. இவைகளை யொருவர்கொணர்ந்து கொடுத்துவிட்டு உட னே போய்விட்டார். நான் அவற்றையென்னவென் றறியவேண்டுமென ஆவ லுடனக் கடிதத்தைத் திறந்தேன். அதில் இப்பார்ஸலை யுன்னுடைய பிரத் தியேக அறையிற் கொண்டுபோய்த் திறக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேனெ னக் கண்டிருந்தது. இப்பார்ஸலிலென்ன அடங்கியிருக்கிற தென்பதைப்பா ர்க்கவேண்டுமென்னும் பிரியமதிகரிக்கவே நானிதை மாடியிற் கொண்டுபோய் என்மேஜையின்மீது வைத்துத் திறந்தேன். அதில் முந்தியே பேசும்படியாக வைக்கப்பட்ட ஒருபோனகிராப் (Phonograph) இருந்தது. அதை என்மே ஜையின்மீது வைக்குமுந்தியே கிர்-ர்-ர்-ர் என சப்தம்செய்ய வாரம்பித்துவி ட்டது. பிறகு அக்கருவிக்குரிய சப்தத்துடன் பின்வருமாறு பேசத் தொடங் கிற்று.

"இவ்விதம் நன்னம்பிக்கை யன்னியில் நான் ஏன் வருந்துகின்றேன் ? கிர்-ர்-ர்-ர். மற்றமனிதர்களைப்போல் நான் உனக்கெதிரே நின்று என் நொ ந்தமனதிலுள்ளதை உன்னிடமேன் சொல்லமுடியவில்லை ? கிர்-ர்-ர்-ர். என் னால் முடியவில்லையே. கிர்-ர்-ர்-ர். என்னவநம்பிக்கையுடன் யுத்தம்செய்து எவ்விதமாவது என்மனதை உனக்கறிவிக்கிறதென்று உன்முன் வந்தவுடன் நான் ஊமையாய் விடுகிறேனே. கிர்-ர்-ர்-ர். என்மனதானது வெளிவிடத்

த்விக்கும்பொழுது என்னுவை யெழும்பாவண்ணம் செய்யக்கூடிய சக்தியுன்னிடமுளதா? கிர்-ர்-ர்-ர். என்னை எவ்வளவு கௌரவக்குறைவாக நினைத்தாலும் சரியே. நான் சொல்லுவதைமட்டும் கேள். கிர்-ர்-ர்-ர். நானுன்னை முதல்தடவைப்பார்த்ததுமுதல் பைத்தியம்பிடித்தலைகிறேன். கிர்-ர்-ர்-ர் நீ என்னுடையவளாயிரு. கிர்-ர்-ர்-ர். உன்பக்கத்தி லென்னை யழைத்துக்கொள். கிர்-ர்-ர்-ர். இக்கஷ்டத்தைவிட்டு என்னையகற்று: கிர்-ர்-ர்-ர். ஒரு வார்த்தை சொல்லு. கிர்-ர்-ர்-ர். நான் உன்னுடைய போவலா யிருக்கிறேன். கிர்-ர்-ர்-ர். உன்னுடைய பதிலை யானெதிர்பார்க்கிறேன். கிர்-ர்-ர்-ட்". இத்துடன் நின்றுவிட்டது. உடனே யக்குழலை யெடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதுதவறி கீழேவிழுந்து உடைந்துவிட்டது. தாள்களையெல்லாம்பொறுக்கி எல்லாவற்றையும்சேர்த்து ஒருபார்ஸலாகச் செய்து திருப்பி யனுப்பிவிட்டேன். அவர் என்மனதை யறிந்துகொண்டார்; பிறகு நானிதுவரை யவரைப் பார்க்கவில்லை. ச. ஜ. மி.

RECENT TAMIL PUBLICATIONS.

நவீன தமிழ்ப் பிரசுரங்கள்.

மதுரை பிரமஞான சபையார்

அதிக ஊக்கத்துடன் உழைத்து வருகின்றார்கள். இன்னோர் மாதிரியே யங்கங்குள்ள சபையார்கள் எல்லோரும் உழைப்பார்களே யாகில் அச்சபையின் நல்லெண்ணங்களும் அவைகளால் விளையக்கூடிய நன்மைகளும் நாட்டவர்களுடைய உரிமைப் பொருள்களாகும். இன்னோர் பற்பல துண்டுப்பத்திரிகைகளை அச்சிட்டு வெளிப்படுத்தியுளர். அவைகளிற் பலவற்றை எமக்கு அனுப்பித்தந்தார்கள். அவைகள் ஒவ்வொன்றும் சொல்லுதற் கேலாத விஷயங்களைச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கின்றது. இச்சபையின் உடலுயிராக ஹைகோர்ட்டு வைக்கீல் ம-ா-ா-ஸ்ரீ P. நாராயண ஐயரவர்கள் விளங்குவது சபைக்கும் ஜில்லாவிற்குமே பெருமை. இச்சபையார் பிரசுரிக்கும் பத்திரிகை புத்தக மாதிவைகளை அவ்வப்போது எமக்கு அனுப்பிவரின், அவைகள் பயன் படுமாற்றிற் பயன்படுமென்றே உறுதி கூறுகிறோம்.

வில்லிபுத்தூரர் பிள்ளைப்பெருமாளையங்கார் சரித்திரம்.

சிறக்க வெளிப்பட்டுள்ள இச்சிறுநூலின் ஆசிரியர் பண்டிதர் T. வெங்கடராம ஐயங்கார் அவர்கள். தனக்கிட்டிருக்கும் பெயர்க்கிணங்கவே இரு மாகான்களின் சரித்திரங்களை ஒருவாறு விஸ்தாரமாகப் புத்தகம் அடக்கிக் கொண்டிருக்கின்றது. ஓர் ஐயப்பாடுமின்று. எனினும் அருணகிரிநாதர் சம்பந்தமாக வெழுதப்பட்டுள்ளவை சிவநேசச் செல்வர்களுக்கு மனத்தாங்கலை

யுண்டுபண்ணும். அங்ஙனம் எழுதாமல் வேறுவிதத்தில் எழுதியிருத்தல் அசாத்தியமோ என்று சிலர் வினைக்கவுங்கூடும். இத்தகைத்தான லோகோபகாரப் புத்தகங்கள் பொதுவாக எழுதப்பட்டால் எல்லோருடைய கரமுமேறும் என்பவர்களும் உண்டு. தற்காலத் தவர்களுக்குத் தக்க வண்ணம் எழுதப்பட்ட இப்புத்தகம் ஃப். ஏ. பரீக்ஷைக்குரிய பாடங்களில் ஒன்றாக்கத் தகுந்தது. பரீக்ஷாதிகாரிகள் இதனைக் கவனிப்பார்களென்றே நம்புகிறோம். இச்சிறு புத்தகத்திற்கு தோட்டக்காடு ம-௱-௱-ஸ்ரீ இராமகிருஷ்ணப் பிள்ளை (B. A F. B. H. S.) யவர்கள் ஓர் ஆங்கிலேயே முகவுரை யெழுதி யிருக்கின்றனர். இளைப்பாறுவான் சென்னை வந்த பண்டிதர், தமிழ்த் தொண்டராக வுழைக்கத் தோன்றியது சோம்பித்திரிவோரைத் தூண்டுதற்கேதுவா யிருக்கின்றதென்னத் தெரிந்து சந்தோஷிக்கிறோம். புத்தகத்தின் விலை அணு 6.

தர்க்கபாஷை. (Logic)

மிஸ்டர் பாலசிங்கம் தமது தகப்பனார் மிஸ்டர் கதிர்வேல் பிள்ளை இரண்டுமுறை அச்சிட்டு வெளிப்படுத்திய தர்க்கபாஷை என்னும் நூலை இப்போது மூன்றாம் பதிப்பாக அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கிறார். பிராசீனதர்க்கமாகிய இந்நூல் சமஸ்கிரதத்தில் சிவகேசவ மிசிரனு லியற்றப்பட்டுத் தமிழில் துறைசைமங்கலம் சிவப்பிரகாசரால் மொழிபெயர்க்கப்பட்டது. காலத்துக்குக்காலம் ஒன்றன்பின்னொன்றாய் ஏட்டுப்பிரதிகளில் எழுதப்பட்டு வழுவளைந்து வசனமயங்கி சிக்குண்டுபயன்படாதுகிடந்த இந்நூலை மிஸ்டர் கதிரைவேற் பிள்ளையவர்கள் சமஸ்கிருத முதல்நூலோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பரிசோதித்து வழுமுதலிய வற்றை யெல்லாம் களைந்து பயன்படுநூலாக்கி வெளியிட்டனர். இந்நூல் எழுபதார்த்தங்களைங் கூறும் சித்தாந்த முத்தாவலி முதலிய நவீனதர்க்கம் போலாது பிரமாணம் முதலிய பதினாறு தர்க்கங்களைப் பற்றிக் கூறுகின்றது. நமது தமிழ்ப்பாஷையில் தர்க்கசாஸ்திரசம்மந்தமாக உள்ள நூல்கள் மிகச்சிலவே ஆதலால் இத்தகைய நூலை வெளிப்படுத்தி உலகிற் குபகரித்திருப்பது சிலாக்கியமான காரியம் என்று செப்பவும் வேண்டுமோ? ஆங்கில சாஸ்திரத்தை அநுசரித்துப் புத்தகங்களைப் பிரசுரித்தலே அதிக பயனை விளைவிக்கும்.

சத்த தத்துவ சூடாமணி. (Philology)

மிஸ்டர் மாகரல் கார்த்திகேய முதலியார் தாம் தமிழ் ஆரிய முதலிய பாஷா விசாரணம் செய்தும் எல்லாச் சொற்களும் சூரியனாகிய ஓர் வியாபக வியற்கைத் தாதுவினின்றே ஒன்றிவிருந்தொன்று அனுசுத சம்பந்தம் பற்றி உண்டாயினவென்றும் பிறகு அச்சொற்களின்கூட்டமே ஒருபாஷையாயிற்றென்றும் அவ்வொருபாஷை யினின்றே தமிழ் ஆரிய முதலிய எல்லாப் பாஷைகளும் பிரிந்து இயற்கையாலும் செயற்கையாலும் வேறுபட்டன என்றும் கண்டுபிடித்து, அச்சொற்காரண முதலியவைகளைத் தெளிவு பெற விரித்துப் பாயிரவியல் இலக்கணவியல் முதனிலையியல் ஆந்தரவியல் ஆரியவியல் என ஐந்தியல்களாகப் பாகுபடுத்தி சத்ததத்துவ சூடாமணி (Philology) யென்னும் பெயரால் ஓர் கத்தியநூல் இயற்றியிருக்கின்றனர். ஆனல்

அல்லதை அச்சிட்டு வெளிப்படுத்தப் போதியபணம் தம்மிடத்தில் யில்லாததினால் அதற்கு தமிழ்ப் பாஷாபிவிருத்தியிற் பிரியமுடைய கனதனவான்கள் உதவிபுரியவேண்டுமென்று விண்ணப்பம் செய்திருக்கின்றார். மிஸ்டர் முதலியார் இயற்றிய மாதிரி நூல்கள் நமது பாஷையில் இல்லையென்றே சொல்லலாம். மேலும்மிகவும்பிரயோசனப்படக்கூடியது. ஆகையால்பொருளுதவிசெய்யக்கூடியவர்கள் முன் வந்து அப்புத்தகத்தை அச்சிட்டு வெளிப்படுத்துவார்களாயின் தமிழ் உலகிற்கோர் பேர்உபகாரம் செய்தவர்களாகக் கருதப்படுவார்கள். அதை அச்சிட்டு வெளிப்படுத்த ஏறக்குறைய 600 ரூபாய் ஆகுமாம்.

தமிழ்வாசக புத்தகங்கள் (Tamil Readers)

முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, வாசகபாடங்களை நெடுநாளைக்கு முன்பே வரப்பெற்றனம். இவை நூதனபுத்தகங்கள். தமிழ்ப் பாஷையின் பாடபுத்தகங்கள் என்னும் பெயர் இவையிற்றிற்கே தகும். கார்த்துவைட் துரையாதியாம் பல ஐரவ நிபுணர்கள் இயற்றிய கைம்முறை போலாது இவை தமிழ்ப்பாஷையை இளைஞர் பயில்வதற் கியைந்த எளிய நடையில் தமிழ்ப் பாஷையிலேயே சிந்தித்துத் தமிழ்ப் பாஷையிலேயே எழுதப்பெற்றவை. பாடங்கள் அனுசரிக்கப்பெற்ற வழிகள் மட்டினும் ஐரவர்தாயிருக்கின்றது. இவையிற்றில் முதற்பாட புக்தகத்திற்கு மட்டிலும் தமிழ்ப் பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ C. R. நச்மசிவாயமுதலியார் ஆசிரியர். மற்றவை மூன்றினுக்கும் அவருக்குமுன் ம-ா-ா-ஸ்ரீ சிவஞானம் பிள்ளையும் கூடிவருகிறார். இப்புத்தகங்கள் வெளிப்போந்தது மாதக்கணக்கி லிருப்பினும், கல்வியிலாகாத் தலைவர்களால் அங்கீகரிக்கப்பட்டதுமன்றிப் பற்பல பாடசாலைகளிற் கல்விபயிலுமாணவர்களுக்கு உபயோகப்பட்டும் வருகின்றன. இது எவருக்குத்தான் களிப்பை யூட்டாது! ஒவ்வொரு புத்தகமும் பலபலபடங்களையும், கையெழுத்துக் கடிதாசிமாதிரிகளையும், இன்னும்பலவற்றையுங் கொண்டுள்ளது. இத்தகைத்தான புத்தகங்களே இக்காலத்து மாணவர் கரையேறுதற் கின்றியமையாதவை.

சகலகலா பூஷணம்.

இது ஓர் பெரியபுத்தகம். அநேக அரியபெரிய விஷயங்களை உள்ளடக்கியுள்ளது. இதன் ஆசிரியர் ம-ா-ா-ஸ்ரீ தியாகராய முதலியார் தெள்ளிய தமிழ்நடையில் எல்லாருக்கும் வேண்டிய அறம்பொருள் இன்பம் வீடென்பன வற்றின் திறத்தினை நன்கெடுத்துக் காட்டியிருக்கின்றார். இதில் வினாவிடைகளும், கதைகளும், பிறவும் உள்ளன. விலை ரூ. 2 0-0.

இராபின்ஸன் குரோசோ.

ம-ா-ா-ஸ்ரீ T. செல்வ கேசவராய முதலியார் (M. A.) அவர்களின் தமிழ் ஆற்றலை அறியாதவர் உளரோ? "ஞானபோதினிக்கும்" "செந்தமிழினுக்கும் விஷயதானஞ் செய்வதிற் சேகேறியவர். இவர் எடுத்தெழுதும் வியாசங்கள் ஒவ்வொன்றும் சொல்நயம், நடைநயம், பொருள்நயம் கொண்டிருப்பதுவே. இன்னோர் புத்தகங்களும் அவ்வாறே என்றால் "இராபின்ஸன் குரோசோ" என்னும் சிறுநூலின் நடையை இன்னதென்று விளக்குவது அனுவசியமன்றோ? இதுசின்னஞ்சிறிய புத்தகம் கடிகாரப் பையனுட்கொள்ளக்கூடிய வளவுசிறியதாய், துணிக்கட்டடங் கொண்டதாய், நன்கச்சேறியுள்ளது. விலை அணா 4.

DEPARTMENTAL NOTES.

பலதுறைக் கலாவிசேடக் குறிப்புகள்.

LITERARY.

மகாபாரத நூதன விசாரணை.

க்வாலியர் இராஜ்யத்தில் முதல் ஜட்ஜ்வேலைபார்க்கும் மிஸ்டர்வைத்யா M. A. L. L. B. என்ற வித்வான் ஆங்கிலேய பாஷையிலும் சம்ஸ்கிருத பாஷையிலும் உயர்ந்த தேர்ச்சியுடையவர். இவர் சமீபத்தில் "மகாபாரத விசாரணை" என்று ஓர் நூல் ஆங்கிலேயத்தில் எழுதிப் பிரசுரித்திருக்கின்றார். இவரது விசாரணையை முழுதிலும் எடுத்துவிளக்கி அவர்செய்திருக்கும் முடிவுகளுக்கு அவராற் கூறப்படும் காரணங்களை யெல்லாம் விரித்துச் சொல்லுதல் இங்கு அசாத்தியமாகும். எனினும், அவரது முடிவுகளில் முக்கியமானவற்றை மட்டிலும் எடுத்துரைப்போம்.

(1) மகாபாரதத்திற்கு ஆரம்பத்தில் "ஜயம்" என்றபெயர் வியாசாசாரியராற் கொடுக்கப்பட்டது.

(2) இப்போது மகாபாரதம் என்றுவழங்கும் நூல்முழுதும் வியாச பகவானால் எழுதப்பட்டதன்று.

இதில் வைஸம்பாயனர் ஸௌதி என்ற இவரால் கோத்து வைக்கப்பட்ட பாகங்கள்பல இருக்கின்றன.

(3) மகாபாரதம் 5,000-வருஷத்துக்கு முன்நடந்ததென்ற வைதியர்களின் கொள்கையே யுக்திக்குப் பொருந்தியது. அந்நியசரித்திர ஆராய்ச்சியும் இக்கொள்கைக்கு இணங்கியிருக்கிறது.

இம்மூன்றும் இவர் நூலின் முடிவுகளுக்குள் முக்கியமானவை. பொதுவாக ஆங்கிலேய சரித்திராசிரியர்கள் மகாபாரத யுத்தத்தின் காலம்மிஞ்சிய பக்ஷம் 3000-வருஷத்துக்கப்பால் போகவேமாட்டாதென்று கூறுகின்றனர். இவர் அதற்குமேல் அனேக ஆதாரங்களைக் கொண்டு பாரதகாலம் 5,000 வருஷத்துக்கு முந்தியதென்று சித்தாந்தம் செய்வது மிகவும் கவனிக்கத்தக்கது. ஈஜிப்டு தேசத்தின் அதிபுராதனமான கூர்மைக் கோபுரம்கூட 3,500-வருஷத்துக் கிப்பால் கட்டப்பட்டதுதானென்று தற்காலப் பண்டிதர்கள் ஊகிக்கிறார்கள். அவ்வாறாக, 5,000-வருஷத்துக்குமுன் பாரதப்போர் புரிந்த வீரர்களும், அதை அத்தனை அற்புதமாக வர்ணித்த மகா கவியும் வாசம்புரிந்த இந்தியாவில் நாகரீகம் எத்தனைபரவி வந்திருக்கவேண்டுமென்பதை நினைக்க ஆச்சரியமுண்டாகிறது. மேலும் அந்நூலில், பாரதக்கதைகள் பலவற்றில் விளங்கக் கூடாதவைகள் தெளிவாகவிளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. காண்டவவனத்தில் தக்ஷகன் என்ற பெயருடைய நாகராஜன் (நாகர் என்றபெயர் கொண்ட ஓர் ஜாதிமனிதன் தலைவன் இருந்தபோது அவன் தான் வசித்துக்கொண்டிருந்த காண்டவவனத்திலிருந்து துரத்தப்பட்டு, பாண்டவருடன் போர்செய்ததாகவும், பிறகு நெடுநாள் மேற்படி தக்ஷகன் குலத்தாருக்கு பாண்டவகுலத்தார்மீது பகைமை யிருந்தமையால் பாண்டவர்களின் பவுத்திரனாகிய பரீக்ஷித் அரசனை நாகச்சாதியானொருவன் கொன்றுவிட்டதாகவும், அதற்குப் பழி வாங்கும்பொருட்டே பரீக்ஷித்தின் மகனாகிய ஜனமேஜயன் நாகச்சாதியாரை வேரறுத்ததாகவும் இப்பண்டிதர் கூறுகின்றனர். இவ்வாறு தெளிவுறுத்தப்பட்ட கதைகள் பல.

Works by T. Ramakrishna.

'Padmini.'—An Indian Romance with an Introduction by the Right Hon'ble Dr. James Bryce, D.C.L., M.P. 'It is a veritable treasury of Hindu Folklore.' Price per copy Rs. 2-8-0.

'Tales of Ind' and other Poems—Rs. 2-8.

Copies can be had from the Secretary—*'Madras Literary Bureau.'*

"THE TAMILS 1800 YEARS AGO."

Rs. Five (5) only, Postage Extra.

1. "The author gives a graphic account of the ancient geography of the land of the Tamils, their early commercial relations with foreign nations, the different peoples who spoke Tamil, the political history of the Tamils, and concludes with a brief and vivid description of their social life, mode of warfare, literature, philosophy and religion. The chapter on Tamil poets and their poem displays the eruditon of the uthor, and the extent of his research into the vast field of Tamil literature."—*The adras Mail* (leader of the 13th May 1904)

2. "For a book of the kind the materials must be collected from various sources, hen they are collected they have to be so arranged that the lesson to be drawn and he narrative itself may be clear and of no doubtful import. Mr. Kanakasabhai has accomplished all this and he deserves to be congratulated on the success of his labours. He has rendered a public service of no small value."—*The Madras Standard.*

3. "The history of ancient India dealt with in his publication relates to as far ck a period as A.D. 50, and covers nearly a century, in regard to which Mr. Kanaabhai observes that the Sanskrit Literature is strongly poor, while a considerable rtion of the Tamil Literature of that very period has come to us almost intact and reveals to us the condition not only of the Tamils, but also of other races who inhabited the rest of India in that remote age. * * * The book is altogether a unique publication of its kind and is an exhaustive history of a period in Southern India, in regard to which we have scarcely any authentic history, except the historical allusions scattered about in the pages of Tamil Works of antiquity."—*The Madras Times.*

4. "The book will be welcomed as a valuable addition to the Library."—*The Times of Ceylon.*

For copies apply to the Secretary to the 'Madras Literary Bureau,' Broadway, Black Town. Madras.

TAMIL BOOKS.

1. 'தென்னாட்டுச் சிரேட்டர்கள்.' (முதற்பாகம்—இதிலே ஒன்பதின்மர் ஜீவிய சரித்திரங்கள் அவரவர் திருவுருவப் படங்களுடன் நற்றமிழ் இனிய நடையில் எழுதப்பட்டுள்ளன. விலை அணா 12.

2. 'பன்னிரு பெண்மணிகள்':—ஷேக்ஸ்பியர் நாடகமாதர்கள் இன்னோராவார் இதிலே பலவகைப்பட்ட பெண்மணிகளின் சரிதைகள் அடங்கியுள்ளன. பெணபாலார்க்கு மேனாட்டுமாதர் சரிதம் புகட்டுதற் கேற்ற புத்தகம் இதுவே. ஒவ்வொரு மாதும் கையில் ஏற்றுப்படித்துப் புத்தகப்பெட்டியிற் பதனப்படுத்தி வைக்கத்தகுந்த சிறந்த ்தகம் இதுதான். விலை அணா 6.

3. 'விக்டோரியா மெய்க்கீர்த்தி':—விக்டோரியா மகாராணியார் மீது பாடப்பட்ட புகழ்மாலை இது, இதிலே அரியபெரிய செய்திகள் பல அடங்கியுள்ளன. பிரபந்தம் அகவற்பாவால் அமைந்தது; விக்டோரியாவின் ஜனனமும், சரித்திரமும் நல்லவசனத்தில் எழுதப்பட்டுள்ளன, இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு சகலத்திற்கும் உண்டு. பம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜி கனம் சந்திரவர்க்கர் இதற்கோர் இங்கிலீஷ் பாயிரம் எழுதியுள்ளார். இதன் விலை அணா 12. புத்தகங்கள் வி. பி. ல். அனுப்பப்படும்.—

4. இரசாயன சாத்திரம். விலை அணா 6.

5. சத்தியவிஜயம் விலை அணா 4.

முற்குறித்த புத்தகங்களை வேண்டுவோர் மதராஸ் லிடரரி பூரோ செக்ரடரிக்கு ...க்கொள்ளலாம்.

QUITE A FRESH PUBLICATION.

A PRIMER OF TAMIL LITERATURE.

BY M. S. PURNALINGAM PILLAI, B.A.

Price One Rupee, Postage Extra.

OPINIONS.

1. *The Christian Patriot.*—"As the first attempt of its kind the author of this highly interesting volume must have taken great pains in its production. Tamil literature is one of the most ancient of Indian literatures, and the number of works extant is sufficient of itself to indicate its vastness. According to Nakkirar, the revered President of the third *Sangam*, the three *Sangams* seem to have existed for about ten thousand years, presided over by one hundred and ninety-seven kings who sat in judgment on the literary production of nearly eight thousand and seven hundred poets. With traditions and legends such as these, full of improbabilities and contradictions, the author must have spent years of hard study and labour to bring the primer to its present acceptable form.

Tamil literature is divided into the following six ages or periods in the book :—

I. The Age of the Sangams—up to A.D. 100.
II. The Age of the Buddists and Jains—A.D. 100 to 600.
III. The Age of Religious Revival—A.D. 600 to 1100.
IV. The Age of Literary Revival—A.D. 1100 to 1400.
V. The Age of the Mutts—A.D. 1400 to 1700.
VI. The Age of European Culture—A.D. 1700 to 1900.

The author has carefully and with great discrimination chronicled the various poets and works belonging to these periods The history of each poet with the most interesting anecdote connected with him as well as the contents of the works of each is given in clear and concise language. A study of the Primer will not, we are sure, fail to create an admiration and love for the study of Tamil literature. The interesting feature of the book is its being up to date and the appendix of select works and the list of a hundred choice works in Tamil literature are very useful. * * * It has "infinite riches in a small room."

2. *The Madras Mail*—"The publication, which is in English, is the first attempt of its kind and will be of great help to Students in the High School and College Classes whose Vernacular is Tamil, and also to foreigners like European Missionaries, Civilians, &c., who will have a general idea of the vast literature extant in Tamil * * * The Primer supplies a real want."

3. *The Hindu.*—"Such a systematic treatise has been a long felt want. The book gives a clear idea of the wide range of Tamil literature."

4. *The Madras Times.*—"The author has done a service to his community and the public at large by compressing a great deal of *useful* and *up to date* information in the small compass of 218 pages."

5. *Hon'ble Justice Sir S. Subramania Aiyar, K.C.I.E.*—"I have no hesitation in saying it is *a most useful contribution* on a subject which cannot but interest residents of this part of India.."

For copies apply to
The Secretary—"Madras Literary Bureau," 10, Broadway, Ma[dras]